# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 3 | ஞாயிறு 18-2-40 பிரமாதி௵ மாசிமீ 6உ | முத்து 15 |
|---|---|---|

## பொருள் அடக்கம்



| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| கடுகளவு புண்ணியம் | ... ... ... ... | 414 |
| போகிற போக்கில் | ... ... ... ... | 416 |
| உலக வர்த்தமானம் | ... ... ... ... | 418 |
| இது தெரியுமா? | ... ... ... ... | 419 |
| அதிகப் பிரசங்கம் | ... ... ... "அதிகப்பிரஸங்கி" | 420 |
| சங்கீத மஹாநாடு | ... ... எ. என். கல்யாணசுந்தரம் எம். எ. | 421 |
| விதை யொன்று முளை யொன்று | ... வி. வி. சிந்தாமணி எம். எ. | 423 |
| ஈசனருள் | ... ... ... மாலதி | 427 |
| பாட்டியின் டைரி | ... ... ... ஆர். பங்காருஸ்வாமி | 431 |
| விமர்சனம் | ... ... ... ... | 433 |
| சிறுவர் பகுதி | ... ... ... ... | 435 |



"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.




# கடுகளவு புண்ணியம்

உலகம் செய்த மலையளவு பாவத்தில் கடுகளவு புண்ணியங்கூட இருக்கிறப் போலிருக்கிறது. கேவலம் மிருகங்கள் போல் ஒருவரையொருவர் கொன்று கால க்ஷேபம் செய்யும் ஐரோப்பாவின் நிலைமை முன்னேற்றம் அடையும் என்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. மூன்று இடங்களிலிருந்து சமரஸ முயற்சிகள் கிளம்புகின்றன. இம் மூன்றும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்குமானால் ஐரோப்பாவில் மறுபடியும் சமரஸம் நிலவும் என்பது தெளிவாக ஏற்படுகிறது. ஸ்டாக்ஹோம்மிலிருந்து நியூயார்க் ரேடியோவில் கேட்டதாக வெளியான சமரஸப் பேச்சு கொயரிங்கிடமிருந்து கிளம்பியதென்று செய்தி வந்தது. கொயரிங் ஓர் சிறந்த ராஜ தந்திரி. அவரிடமிருந்து வந்ததாகச் சொன்ன சமரஸ முயற்சியை நன்றாகக் கவனிப்பது அவசியம். அவர் கூறும் ஆறுவித நிபந்தனைகளில், யுத்தக் கக்ஷிகளிடமிருந்து நஷ்ட ஈடு வாங்குவது கூடாது என்பது ஒன்று. மற்றவைகள் ஜெர்மனியின் ரீச்சில் கொஞ்சகாலத்துக்குமுன் சேர்க்கப்பட்ட ஆஸ்டிரியா, செக்கோஸ்லோவேகியா, போலந்து முதலிய தேசங்களைப் பற்றி இருக்கின்றன. இத்தேசங்களை ரீச்சில் சேர்த்துக்கொள்ளலாமா வேண்டாமா என்பதை, ஆங்காங்கு பிரிட்டிஷ்-பிரஞ்சு—ஜெர்மனி கமிஷனின் மேற்பார்வையில் நடத்தப்படும் ப்ளேபிஸைட் மூலம் தெரிந்துகொள்ளலாம் என்பது நிபந்தனைகளில் ஒன்று. ஐரோப்பிய பொருளாதாரப் பிரச்னைகளை நன்றாக அமைக்க ஐரோப்பிய வல்லரசுகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு பொருளாதார சபை ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்பது கொயரிங்கின் அபிப்பிராயம் என்றுதெரிகிறது. இவ்வித அபிப்பிராயம் ஹிட்லருக்குத் தெரிந்துதான் வெளிவந்திருக்கவேண்டும், என்பது பலர் கருத்து.

## தொழிற் கட்சியின் தோரணை

இதற்குப் பிறகு பிரிட்டிஷ் தொழிற் கட்சி சமரஸத்தைப்பற்றி வெளியிட்டதையும் பார்த்தால் சில அம்சங்களில் ஜெர்மனி சமரஸப் பேச்சும் தொழிற் கட்சியின் அபிப்பிராயமும், ஒன்றாகத்தான் இருக்கின்றன என்பது தெரிகிறது. "ஹிட்லரைத் தொலைத்துவிட வேண்டும். ஆக்கிரமிப்பை நிறுத்த வேண்டும்" என்பதுதான் தொழில் கட்சியின் யுத்த நோக்கம். செக்கோஸ்லோவேகியாவுக்கும் போலந்துக்கும் சுதந்திரம் கொடுக்கவேண்டும், என்று தொழிற்கட்சி கர்ஜிக்கிறது. ஆஸ்டிரியா விஷயத்தை மாத்திரம், அங்கு வசிப்பவர்களின் இஷ்டப்படி நிர்ணயிக்கலாம் என்று அபிப்பிராயப்படுகிறது. ஐரோப்பிய பொருளாதார நிலைமையை நிச்சயம் செய்ய, விடுத்திருக்கும் தீர்மானமும் ஜெர்மன் சமரஸ நிபந்தனையுடன் ஒத்துக்கொள்கிறது. ஆனால் இவ்வித சில ஒற்றுமைகளில் வேற்றுமைகளும் இருக்கிறபடியால், மற்றொரு வெளி அரசின் மத்தியஸ்தமின்றி இச் சமரஸ முயற்சி நிறைவேறாது. அதற்கு தகுந்த சமயத்தில் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் தன்னாலானதை உலகத்துக்குச் செய்ய முன்வந்திருக்கிறார்.

## அமெரிக்கா தூது


ஸம்மர்வெல்ஸ் என்பவரை ஐரோப்பாவிற்குச் சென்று பிரயாணம்செய்து

தற்கால ஐரோப்பிய நிலைமையைக் கவனித்துத் தனக்கு தெரியப்படுத்தும்படி அனுப்பி இருக்கிறார். இது அவர் போன்ற கௌரவமான பதவியிலிருப்பவருக்குத் தகுந்த காரியமே. யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னும் ஆரம்பித்தபின்னும்கூட அவர் ஐரோப்பிய நிலைமையை ஒழுங்குபடுத்த சிரமம் எடுத்துக்கொண்டார். ஆனால் முன் பிரயத்னங்களில் அவர் ஜெயம் அடையவில்லை. ஹிட்லர் அவர் பேச்சைக் கேட்கவில்லை. அப்பேற்பட்ட ஆஸக்தியுள்ளவர் இப்பொழுது இப்பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார் என்றால், அது ஐரோப்பாவுக்கே ஒரு கௌரவம் அல்லவா? ஸம்மர் வெல்ஸ் ஐரோப்பாவைப் பிரயாணம் செய்யப் போவதை யறிந்து எல்லோரும் ஏகமனதாக திருப்தியடைகிறார்கள். இவ்வித அமெரிக்கருடைய பிரயாணம் சமரஸத்தை நிலைநாட்டும் என்று எல்லாத் தேசங்களும் ஆவலுடன் வரப்போகும் நிகழ்ச்சிகளை எதிர்பார்க்கின்றன. அமெரிக்காவின் நடுநிலைமை சமரஸத்திற்கு ஒரு சிறந்த சாதனமாக இருக்கும். அமெரிக்காவின் பக்ஷபாதமற்ற சமரஸ நிபந்தனைகள் யுத்தக் கக்ஷிகளுக்குத் திருப்தியளிக்கக் கூடும். டெய்லி டெலிக்ராப் என்னும் ஆங்கிலப் பத்திரிகை “உலகத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு இருக்கும் செல்வாக்கை, பிரிட்டனும் பிரான்ஸும் அறிந்திருக்கின்றன. ஆகையால் அந்த ஹோதாவில் யுனைடெட் ஸ்டேட்ஸ் தன் சக்தியால் ஐரோப்பிய நிலைமையை ஒழுங்குபடுத்தும்படி செய்தால் பிரிட்டனும் பிரான்ஸும் திருப்தியடையும்” என்று சொல்லுவது மிகையாகாது. “ஒரு சமரஸ ஏற்பாட்டில் யுனைடெட் ஸ்டேட்ஸின் உதவி விலையுயர்ந்ததாக இருக்கும். எனவே தலைவர் ரூஸ்வெல்ட்டின் சமரஸ ஏற்பாட்டின் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதில் நாம் முழு உதவியும் அளிக்கத் தயாராக இருக்கிறோம்” என்று அப்பத்திரிகை கூறுவதிலிருந்து ரூஸ்வெல்ட்டின் நற்குணங்களைத் தெரிந்துக் கொள்ளலாம். பிரிட்டன், பிரான்ஸ், இவ்விரண்டு தேசங்களும் தங்கள் யுத்த நோக்கத்தில் சிறிதும், வழுவாமல் நடக்க எண்ணி இருந்தாலும் கௌரவமாக ஒரு சமரஸம் ஏற்படக் கூடுமானால் அவர்கள் அதை வேண்டாம் என்று மறுக்கப்போவதில்லை. சேம்பர்லின் ஸம்மர் வெல்ஸ் வரவைப் பற்றி விடுத்த அறிக்கையிலிருந்தும், இன்னும் பிரான்ஸில் அவரை வரவேற்கவும் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவும் நிச்சயம் செய்திருப்பதிலிருந்தும் இது நன்கு விளங்குகிறது.

## புதிய சகாப்தம்

யுனைடெட் ஸ்டேட்ஸின் இம் முயற்சிக்கு ஹிட்லர் என்ன செய்யப் போகிறாரென்பது தெரியவில்லை. பல பிரமுகர்களுடன் கலந்தாலோசித்தாரென்று கூட செய்தி கூறிற்று. இதுதான் தகுந்த சமயம் என்று ஹிட்லர் நைஸாக சமரஸத்திற்கு ஒத்துக் கொண்டால் தானும் க்ஷேமப்படுவார் எதிரிகளும் க்ஷேமப்படுவார்கள். உலகமும் பிரபல தீர்க்க தரிசிகளின் உதவியால் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பிக்கும். இல்லாவிட்டால் வரப்போகும் பருவத்தில் யுத்தம் எப்படி வலுக்கும் என்பதும், எந்நிலைமையில் முடிவடையும் என்பதும் ஜெர்மனியின் சர்வாதிகாரிக்கே தெரியும். சென்ற மகாயுத்தத்திலும் இதுபோன்ற அமெரிக்காவின் சமரஸப் பேச்சை நிராகரித்ததனால் விளைந்த கேட்டை அவர் அறியாமல் வேறு யார்தான் அறிவார்கள். எனவே ஹிட்லர் இப்பொழுது நிச்சயம் செய்வது ஐரோப்பிய சரித்திரத்திலே ஒரு முக்கியமானதாக விளங்கப்போகிறது. என்ன தீர்மானம் செய்கிறார் என்று பார்ப்போம்.

# போகிற போக்கில்



மாயவரம் ஜங்ஷன் வழியாக நான் இது வரையில் சுமார் ஆயிரம் தடவை ரயில் பிரயாணம் செய்திருப்பேன். ஆனால் இரண்டு வாரத்திற்கு முந்தி, தை அமாவாசைக்கு என் ஊர் காவேரிப் பூம்பட்டிணத்தில் சங்கமுகத்தில் புண்ணிய கால ஸ்னானம் செய்யலாமென்று போன சமயத்தில், நான் மாயவரம் ஜங்ஷனில் கண்ட காக்ஷியே காக்ஷி. அது என்னை முழுவதும் பரவசப்படுத்திவிட்டது.

* * *

என் ரயிலுக்கு, போட்டியாக மற்றொரு ரயில் நின்று கொண்டிருந்தது. இது என்னடா அதிசயம் என்று வியந்தேன். மாயையா? அந்த ரயிலில் மற்றொரு அதிசயம் என்னவென்றால் கிழம், கட்டைகள் ஒன்றும் கிடையாது. கட்டுப்பொட்டிகள், மடிசஞ்சிகள், சாக்கு மூட்டைகள் ஒன்றும் கிடையாது. அழுக்கு கிடையாது. ஸ்திரீகளில்லை. இஞ்சின் எப்படித்தான் இந்த ரயிலை இழுத்ததோ தெரியவில்லை! 'என்ன அதிசயம்' என்று முணு முணுத்துக் கொண்டே, என் பக்கத்தில், மாயவரத்திலே ரயிலேறி உட்கார்ந்த, பட்டை பட்டையாய் விபூதி யணிந்த ஓர் சாஸ்திரிகளை, "என்ன விஷயம் இந்த போட்டி ரயில்" என்று விசாரித்தேன்.

"ஐயா, உங்களுக்கு இது கூட தெரியவில்லையா. இந்த நாள் வைபவங்கள்—நமது சிறுவர்கள் சிறுமிகளுக்கு இது தான் படிப்பு. கிராப்பு, ரயிலோட்டம், காபிகிளப்பு. ரயிலில் உல்லாஸமாய் ஊர் ஊராய் ஓடியாடித்திரிந்து ரயிலடி கிளப்பில் காபி சாப்பிடுவதுதான் நவீன கல்வி தேர்ச்சி. பாருங்கள் காப்பியை எவ்வளவு நாஸூக்காய் சிறுவர்கள் சிப்பிச் சாப்பிடுகிறார்கள். ஒரு கையில் காப்பி கோப்பை, மற்றொரு கையில் இட்லியும், வெங்காய சாம்பாரும்! சில உபாத்தியாயர்கள் குழந்தைகளுக்கு காப்பியை தாங்களே ஆற்றிக் கொடுக்கிறார்கள். எவ்வளவு அன்பு! படிப்பு வருவதற்கு கேட்பானேன்! ஒவ்வொருவர் நெற்றியையும் பாருங்கள். பாழும் நெற்றி, நீரில்லா நெற்றிப்பாழ். படிப்பு எவ்விதம் வரும்? ரயில்காரனுக்கும் காபி கிளப்புக்கும்தான் லாபம். சென்னை பள்ளிக்கூடப் பையன்கள் 'எக்ஸ்கர்ஷன் பார்ட்டி'யாம்—எங்களுக்கு இன்றயதினம் 'ரிப்ரஷ்மண்ட்ரூமில்' நல்ல காபி கிடையாது. ராமேசுவரம் வரையில் யாத்திரையாம். ரயில் முழுவதும் தேடுங்கள். ஒரு புஸ்தகம்கூட கிடையாது. எல்லா நெற்றியையும் பாருங்கள். பாழும் நெற்றியும், கிராப் தலையும், கலிகாலம் முற்றிவிட்டது," என்று சொல்லி, பெருமூச்சு விட்டு தன் மடிசஞ்சியை பக்கத்திலிருந்து எடுத்து, மடியில் வைத்துக் கொண்டார்.

* * *

இதைக்கேட்டதும் நான் உடனே என் ரயிலை விட்டு இறங்கி சாஸ்திரிகளை, என் சாமான்களைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, பிளாட்பாரம் நம்பர் 3க்கு 'எச்ஸ்கர்ஷன் ஸ்பெஷலை' பார்க்கச் சென்றேன். குழந்தைகள் உல்லாஸமாய் இட்லி, காபி சாப்பிடும் காக்ஷியைக் கண்டு களித்தேன். சிறுவர்களை தலைமை வகித்து அழைத்துச் செல்லும் உபாத்தியாயர்களில் ஒருவருடன் எனக்கு பரிசயம்உண்டு. அவர் குழந்தைகளுக்கு காபி ஆற்றி கொடுத்துக் கொண்

டிருந்தார். அவரைக்கண்டு என் களிப்பைக் கூறினேன். "ஐயா நம்நாளில் இதுகளெல்லாம் உண்டோ? இவ்வகை சாதகங்கள் நமக்கு மிருந்திருந்தால், நாம் இப்பொழுது எப்படி இருப்போம். நமது வாழ்நாளை எவ்வளவோ மேன்மையாக நடத்தியிருப்போமல்லவா. ஆனால் இந்தக் காபிக்கு பதிலாக கொஞ்சம் பழையதும், எரிச்ச கறியும் மோர்தீர்த்தமும் ஏற்பாடு செய்திருந்தால் எல்வளவோ சுகமாயும், அழகாயுமிருக்கும். காபி வந்தல்லவோ நமது குடியைக் கெடுத்துவிட்டது. கள்ளுக்கு மேலல்லவோ ஆய்விட்டது," என்று என் பிரசங்கத்தை ஆரம்பிக்கலானேன். ஆனால், அதைப் பூர்த்தி செய்யுமுன் என் ரயில் 'விஸில்' ஊதிவிட்டது. ஒடிப்போய் ரயிலேரி, கூவும் சாஸ்திரிகளின் கவலையை நீக்கினேன்.

* * *

முதல் முதல் நான் எழுதிய கட்டுரையைப்பற்றியும், அது எனக்குக் கொடுத்த ஆனந்தத்தைப்பற்றியும் ஓர் பத்திரிகையில் ஆங்கிலத்தில் சில வருஷங்களுக்கு முன் எழுதியிருக்கிறேன். நான் செய்த முதற் பிரசங்கத்தைப்பற்றி இதுவரையில் ஓர் பத்திரிகையிலும் எழுதவில்லையென்று நம்புகிறேன். எதைப்பற்றி பால்யத்தில் முதல் முதல் பிரசங்கம் செய்தேனென்று தெளிவாய் இப்பொழுது ஞாபகம் வரவில்லை. ஆனால் இரண்டுக்குள் ஒன்று. நிச்சயம்—லார்ட் கர்ஸான் வங்காளத்தை இரண்டாக துண்டித்ததைப் பற்றியோ அல்லது பிரயாணத்தால் வாலிபர்களுக்கு கிடைக்கும் கல்வித் தேர்ச்சியைப் பற்றியோ. லார்ட்கர்ஸான் வங்காளத்தை இரண்டு துண்டாக வைஸ்ராயின் கோடாலியால் பிளந்ததைப்பற்றி சிறுபையன்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி மாயவரத்தில் ஒரு கண்டனக்கூட்டம் நடத்தினார்கள். அதில் முதன்மை நான் வகித்தேன். பேச ஆரம்பித்தேன். சபையில் பேச எழுந்தேனோ இல்லையோ, தலை சுற்ற ஆரம்பித்துவிட்டது. மெய்மறந்து போய்விட்டது. எதைப்பற்றி பேசவேண்டியது என்ற விஷயங்கூட மறந்துபோய்விட்டது. வியற்க, விருவிருக்க ஆரம்பித்துவிட்டது. ஆனாலும் விடாமுயற்சியால் இளம் மனதைத் தேர்ச்சி செய்துகொண்டு பேச ஆரம்பித்து லார்ட் கர்ஸானின் அநீதியான செய்கையை கண்டனம் செய்து அதன்மூலம் முதல்முதல் தேசத்தொண்டு புரியும் பக்தனானேன். வங்காளத்தின் பிளவு, பிறகு ரத்து செய்யப்பட்டதென்று நீங்கள் அறிவீர்கள். அதில் என் கைராசிக்கும் கொஞ்சம் பாகமுண்டு—சேதுவின் அணைக்கு அணிலின் உதவி.

இந்த வங்காளத்தின் பிளவு மூலமாக, நாங்கள் மாயவரம் பள்ளியில் ஒரு பேச்சாளர் சங்கம் ஏற்படுத்தினோம். அதில் மறுவாரமே எனக்கு நானே அக்ஷதை போட்டுகொண்டு 'பிரயாணமும் கல்வித் தேர்ச்சியும்' என்பதைப் பற்றி தைரியத்துடன் பேசினேன். பள்ளிக்கூடம் போகும் சிறுவர்களுக்கு வருஷத்தில் ஒருவாரமாவது பள்ளிக்கூடச் செலவில் சுற்றுப் பிரயாணம் ஏற்படுத்தி முக்கியமான க்ஷேத்திரங்களுக்கு அழைத்துக் கொண்டுபோய் காண்பிக்க வேண்டுமென்று கூறினேன். அது இப்பொழுது முப்பது வருஷங்களுக்கு பிறகு, சென்ற இரண்டு வருஷங்களாக பள்ளிக்கூடங்களில் நடைபெற்று வருவதைக் காண மிக்க சந்தோஷப் படுகிறேன். நமது ரயில் அதிகாரிகள் இதற்கு வேண்டிய சௌகரியங்களை ஏராளமாய் செய்து கொடுக்கவேண்டியது அவசியம். 30 லக்ஷம் பிச்சைக்காரர்களையும், பைராகிகளையும் இனாமாக ஏற்றிச் செல்லும் ரயிலுக்கு, பள்ளியில் படிக்கும் சிறுவர்களை சொற்ப துகைக்கு வருஷத்திற்கு ஒரு வாரம் ஏற்றிச் செல்வதால் நஷ்டமுண்டா? இவ்விதவழிகளால்தான், நமது கல்வி முறையில் முன்னேற்றம் ஏற்படும். தேச வாழ்விலும் முன்னேற்றம் ஏற்படும்.

சதா பிரம்பைப் பிடித்து அடிக்கும் உபாத்தியாயர் கைகளில், குழந்தைகளுக்கு ஆற்றிக்கொடுக்க காப்பிக் கோப்பைகளைக் காணும் காக்ஷியும் காக்ஷி!

மணி

# உலக வர்த்தமானம்

ஐரோப்பாவில் மூலைக்கு மூலை சமரஸப்பேச்சு பரவி வருகிறது. கொய்ரிங் பிரேரேபித்ததாக 6 நிபந்தனைகள் கொண்ட ஒரு சமரஸ ஏற்பாட்டை நியூயார்க் ரேடியோ மூலம் உலகம் தெரிந்துகொண்டது. இது ஹிட்லருக்குத் தெரிந்து செய்ததா என்பது தெரியவில்லை.

பிரிட்டிஷ் தொழிற்கட்சி பிரிட்டனின் யுத்த நோக்கத்தைப்பற்றி விரிவாக அறிக்கை விடுத்திருக்கிறது. "ஹிட்லர் ஆதிக்கத்தை வேருடன் களைந்து எறிந்துவிடவேண்டும். ஆக்கிரமிப்பு என்பதே உலகில் இல்லாமல் செய்துவிடவேண்டும்" என்பது அதன் அபிப்ராயம். கௌரவமான ஏற்பாட்டில் சமரஸம் செய்துக்கொள்ளலாம், என்று கூறுகிறது.

இதனிடையில் தலைவர் ரூஸ்வெல்ட் ஸம்மர் வெல்ஸ் என்பவரை ஐரோப்பாவை சுற்றுப்பிரயாணம் செய்து வரும்படி அனுப்பி இருக்கிறார். தற்கால ஐரோப்பிய நிலைமையைத் தனக்கு அறிவிப்பதற்காக இதைச் செய்திருக்கிறென்று தெரிகிறது. இந்த முயற்சி சமரஸத்திற்காகச் செய்கிறார் என்றும் பலர் கருதுகிறார்கள். ஸம்மர் வெல்ஸ் ஐரோப்பிய பிரயாண தீர்மானத்தைப்பற்றி பிரிட்டிஷ் பிரெஞ்சு தேசங்கள் மிகுந்த திருப்தி யடைகின்றன. அமெரிக்க உத்தியோகஸ்தருக்கு அவருடைய தூதில் சர்வ விதங்களிலும் நேசநாடுகள் உதவி செய்யத் தயாராக இருப்பதாக கூறுகின்றன. ஸம்மர் வெல்ஸ் அடுத்த புதன்கிழமை இடலிக்கும் போவாரென்று செய்தி கூறுகிறது.

ஹிட்லர் இவ்வித முயற்சிகளையும் கவனித்துக்கொண்டு யுத்தத்தையும் விடாமல் நடத்துகிறாராம். சமரஸ விஷயமாக சில பெரிய மனிதர்களுடன் கூடிக் கலந்தாலோசிப்பதாகத் தெரிகிறது.

காந்தி—வைஸ்ராய சந்திப்புக்குப் பிறகு மஹாத்மா டெய்லி ஹெரால்ட் என்ற பத்திரிகைக்குத் தந்தி அனுப்பினார். அதில் டில்லி சம்பாஷணை முறிந்ததற்குக் காரணம் இந்தியாவைப்பற்றி நிச்சயம் செய்ய வைஸ்ராய்க்கு பூரண அதிகாரம் இல்லாததுதான் என்று கூறுகிறார். இந்தியாவுக்கு வேண்டிய அரசியலமைப்பை இந்தியர்களே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கூறுகிறார்.

காந்திஜிக்கு லார்டு ஜெட்லண்டு ஸண்டே டைம்ஸ் என்னும் பத்திரிகையில் பதில் விட்டிருக்கிறார். மைனாரிட்டிப் பிரச்னையை இந்தியர்களே ஒழுங்கு படுத்திக்கொள்ளலாம், என்கிறார். இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் வெகுநாட்களாக சம்பந்தம் இருந்துவந்ததை விவரமாக எடுத்துக் கூறி, பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ்தான் இந்தியர்கள் ஒன்றுபட்டார்கள் ஆங்கில பாஷைதான் இந்தியர்களுக்கு ஒற்றுமை யளித்தது, என்று கூறுகிறார். பிரிட்டிஷ் பாதுகாப்பின் கீழ் இந்திய ஜனங்களும், ஸமஸ்தானங்களும் திருப்தியாக பயமின்றி இருக்கின்றனவாம். காந்தி—வைஸ்ராய் சம்பாஷணை முறிந்து போனதைப்பற்றி ஜெட்லண்டு மிகவும் வருத்தப்படுகிறாராம். ஆனால் இனியாவது ஒரு ஒப்பந்தத்துக்கு வருவார்கள் என்றுதான் நம்புவதாக கூறுகிறார்.

வங்காளத்தில் மாகாண காங்கிரஸுக்கும், காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கும் உள்ள விவாதம் வலுத்து வருகிறது சரத் சந்திரபோஸ் "ஒரு கை பார்த்துதான் விடுவார்"போல் இருக்கிறது.

ஸோஷலிஸ்டு கக்ஷிக்காரர்களும் ஆஸாதுக்கே தங்கள் வோட்டுகளைக் கொடுத்து ராஷ்டிரபதியாக தேர்ந்தெடுத்தார்களாம்.

ஸிந்து மந்திரி சபை ராஜீநாமா செய்யும் என்று செய்தி கூறுகிறது.

# இது தெரியுமா?

## இந்தியாவின் நிலைமை

தற்சமயம் கல்வி கேள்வி, ஆராய்ச்சி முதலிய துறைகளில், இந்தியா எந்நிலைமையில் இருக்கிறது என்பதை தெரிந்துக் கொள்வதற்காக, இந்திக் ஸ்டடீஸ் டைரெக்டர் டாக்டர் ஹொரேஸ் போல்மேன் என்னும் அறிவாளி வாஷிங்டனில், அமெரிக்க காங்கிரஸ் லைப்ராரியில் ஆராய்ச்சி செய்து வருகிறார். இவ்வாராய்ச்சியைச் சரிவர நடத்த, அவர் தன் மனைவியுடன் இந்தியாவில் பிரயாணம் செய்து வருகிறார். இந்தியாவிலுள்ள பல நிபுணர் கூட்டங்களுடன் கலந்து பேசுவாராம். இங்கு பிரசுரமாகும் விஷயங்கள் அப்படமாக காங்கிரஸுக்குச் செல்லும் முறையில் இந்தியாவில் அச்சிடவும் பிரசுரம் செய்யவும் வழிகளைக் கண்டுபிடிக்கப் போவதாகக் கூறுகிறார். அவர் இந்திய சமஸ்தானங்களுக்கும், இன்னும் எல்லா முக்கிய இடங்களுக்கும் விஜயம் செய்வாராம். இந்தியப் பிரயாணம் முடிந்தவுடன் யுனைடெட் ஸ்டேட்ஸ் சென்று இந்திய நிலைமையைப்பற்றி சொற்பொழிவுகள் ஆற்றுவார் என்று தெரிகிறது.

* * *

## முதல் தரமான பொருள்கள்

1938-39ல் மைசூரில் பெரிய தொழில் ஸ்தாபனங்கள் எல்லாம் விருத்தியடைந்தன. முந்தின வருஷத்தைக் காட்டிலும், இவ்வருஷத்தில் உற்பத்தியும் தேவையும் அதிகமாகவே இருந்தன. மார்ச்சு 31யோடு முடியும் 1939 ஸ்டாடிஸ்டிகல் வருஷத்தில், ஸமஸ்தானத்திலுள்ள 8 பஞ்சு மில்கள் 38½ கோடி முழம் துணி உற்பத்தி செய்தன. முன் வருஷத்தின் உற்பத்தித் தொகை 35 கோடி தான். ஸமஸ்தானத்திலுள்ள 3 உல்லன் மில்கள் 1938ம் வருஷத்தில் 12·78 ரூபாய் மதிப்புள்ள சாக்கு உற்பத்தி செய்தன. இரும்புத்தொழிற் சாலைகள் இந்த வருஷத்தில் விருத்தி யடைந்தன. ஆனால் தங்கச் சுரங்கத் தொழில் மாத்திரம் சென்ற வருஷத்தைவிட சிறிது குறைவாகவே உற்பத்தி செய்தது. சர்க்கரைத் தொழில் இந்த ஸ்டாடிஸ்டிகல் வருஷத்தில் மிகுந்த முன்னேற்றமடைந்திருக்கிறது. இந்த வருஷத்தில் அதன் உற்பத்தி 29,231 டன்; இதற்கு முன்வருஷத்தில் 27,575 டன் தான். பஞ்சு ஏற்றுமதி வியாபாரம் இவ்வருஷத்தில் சிறிது அதிகமாக இருந்தாலும், ஐரோப்பிய யுத்தத்தால், திருப்தியானவளவுக்கு வியாபாரம் நடக்கவில்லை.

* * *

## நல்ல பாம்பு!

பல்கேரியன் எல்லைக்கருகில் யுகோஸ்லாவ் கிராமத்தில் நிகாஸ்டாங்கோவிக் என்ற ஒரு கிழவன் இருந்தானாம். அவன் ஒரு குட்டையில் ஸ்நானம் செய்துக் கொண்டிருக்கும்போது தனக்குத் தெரியாமல் ஒரு பாம்பை விழுங்கி விட்டானாம். இப்பொழுது அவனுக்கு வயது 60 ஆகியும் தேக பலம் குன்றாது இருக்கிறானாம். ஒரு வருஷத்துக்குமுன் வயிற்று வலி அவனுக்கு அடிக்கடி வந்துக் கொண்டிருந்ததாம். நாளாக ஆக அவ்வயிற்றுக் கோளாறு அதிகரித்தது. அவனுக்கு தன் வயிற்றுக்குள் ஏதோ ஒன்று நகருவதுபோல் இருந்ததாம். ஆனால் எந்த வைத்தியனிடத்திலும் அவன் தன் உடம்பைக் காட்டவில்லையாம். வீட்டு வைத்தியத்தைச் செய்ய ஆரம்பித்தான். எல்லாவித கிழாயங்களும் குடித்தான். இரவில் படுக்கப்போகும்போது வயிற்றின்மேல் உஷ்ணமான செங்கல்களால் ஒத்தடம் போட்டான். ஒன்றிற்கும் நோய் மசியவில்லை. கடைசியில் தன் வைத்தியமே ஒன்று செய்ய நிச்சயித்தான். சுருட்டு பிடிப்பதும் சாராயம் குடிப்பதும்தான். அதுமுதல் அதிலும் பலனில்லை. ஒரு இடையன் சொன்னபடி 15 நாட்கள் பட்டினி கிடந்தான். வலி அதிகமாகத்தான் ஆச்சுது. பிராணன் போய் விடும் என்றே எண்ணினான். மறுபடியும் அதே இடையன் சொன்ன இன்னொரு மருந்தைச் நிகா. சாப்பிட ஆரம்பித்தான், அதாவது கொதிக்கும் பாலைக்குடிப்பது. தைரியத்துடன் தொண்டை வயிறு எரிய அதையும் செய்தான். மருந்து கைகண்ட ஔஷதமாயிற்று. வயிற்றிலிருந்து ஏதோ புரண்டு வருவது போல் இருந்ததாம். பாம்பு வெளிவந்து விட்டது. அங்கிருந்தவர்கள் எல்லாம் ஆச்சரியப்பட்டார்களாம். வெளிவந்த உடன் பாம்பைக் கொன்று விட்டார்கள். ஆனால் செத்துப் போன பாம்பை இன்னும் நிகா ஒரு புட்டியில் போட்டு வைத்திருக்கிறானாம்.

# அதிகப் பிரஸங்கம்

## பார்ப்பனீயம்

ஐய்யய்யோ! பார்ப்பனீயம் இல்லாத இடமே இல்லையா? குதிரைப் பந்தயத்திலும் அல்லவா அது நுழைந்து விட்டது. இந்தியாவிலிருந்து கிளம்பி, சமுத்திரங்களைத் தாண்டிச் சென்று, யுத்த அமளியில், ஐரோப்பிய அரங்கத்திலும் அடிபட்டுச் சாகாமல் தப்பிப் பிழைத்து, இங்கிலாந்து சென்று, 'டார்பி' குதிரைப் பந்தயத்தில் இந்தப் பார்ப்பனீயம் வெகு தந்திரமாக நுழைந்து விட்டது. ஜூன் மாதம் ஐந்தாம் தேதி "ந்யூமார்க்கட்டில்" நடைபெற விருக்கும் "டார்பி" குதிரைப் பந்தயத்தில் ஓடப் போகும் காப்டன், ஸி. வி. ஆர். ப்லண்டல் துரையின் அருமைக் குதிரையின் பெயர் "ப்ராஹ்மின்" (Brahmin). சென்னை "ஸண்டே அப்ஸர்வர்", ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமாயிருப்பதையும் கவனியாது, உடனே இதைக் கவனித்து, இவ்விதம் ஆரிய-பார்ப்பனீயத்தை ஆதரித்ததற்காக, ப்லண்டல் துரையைச் சரியானபடி தாக்கி எழுதித் தண்டிக்க வேண்டும்.

## "ஒற்றுமை"

"தமிழ்நாட்டுப் படமுதலாளிகளிடம் ஒற்றுமையே கிடையாது; ஒருவர்க்கொருவர் போட்டியிட்டு நஷ்டம் அடைகிறார்கள்; இப்போட்டி ஒழிந்து ஒற்றுமை ஏற்பட்டாலொழிய தமிழ்ப்படங்கள் முன்னேற இடமில்லை" என்று வாய் ஓயாமல் பேசுபவர்களுக்கு இனிமேல் பேசவே இடம் கிடையாது. ஏனென்றால் கனவிலும் நினைக்க முடியாத விஷயத்தில் படமுதலாளிகள் இருவர் தங்கள் ஒற்றுமையைக் காட்டி இருக்கிறார்கள். மதுரையில் ஒரே கொட்டகையில், ஒரே சமயத்தில், இரண்டு படங்களைக் காட்டி படமுதலாளிகள் தங்களுக்குள் உள்ள ஒற்றுமையை திதர்சனமாகக் காட்டி இருக்கிறார்கள். இதற்கு அத்தாட்சி அவர்கள் விளம்பரங்களே. "பிரகலாதா-மதுரை ஸெண்ட்ரல் ஸினிமாவில் 7 வது வாரம்-சேலம் சங்கர் பிலிம்ஸ்" (31-1-40 நாரதர் பக்கம் 5) "வாஹினியின் வந்தே மாதரம்-மதுரை ஸெண்ட்ரல் சினிமாவில் 3.2-40 முதல் 2-வது வாரம் (31-1-40 நாரதர் பக்கம் 19)

## "காங்கிரஸ் அக்கிரமம்"

27-1-40 மதுரை முனிசிபல் சபைக் கூட்டத்தில் "கொசுக்கள் வளர்ப்பதை (Mosquito Breeding) தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்" என்ற தீர்மானம் நிறைவேறி விட்டதாம். ஏனென்றால் மதுரை நகரின் சில பகுதிகளில் வசிப்பவர்களை அவை மிகவும் தொந்திரவு செய்கின்றனவாம் (ஹிந்து-1-2.40) இதனால் பாதிக்கப்படும் கொசுக்கள் ஓலமிட்டழுது வைஸ்ராய்க்கு மனுப் போட்டிருக்கின்றனவாம். மனுவின் ஸாராம்சம் பின்வருமாறு: "காங்கிரஸ்காரர்கள் மைனாரிட்டியாகிய எங்களை அக்கிரமமாய் அழிக்கப் பார்க்கிறார்கள். நாங்கள் திராவிடர்களா அல்லது ஆரியர்களா — மைனாரிட்டியாகிய எங்களுக்குக் கொடுக்கவேண்டிய சலுகைகளெல்லாம் சரிவரக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா என்ற விஷயங்களை விசாரித்து நியாயம் வழங்க உடனே ஒரு ராயல் கமிஷின் நியமிக்கவேண்டும். இது செய்யாமல் இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுப்பதைப்பற்றின யோசனையைக் கையால் கூடத் தொடக்கூடாது. காளைமாடுகளுக்கு அருளின் தங்கள் திவ்யக்கருணை கடாக்ஷம எங்கள் மீதும் சிறிது விழுந்தால் "கொசுவளர்ப்பதும்" ஒரு புனிதமான கர்மம் ஆகிவிடும். ராஜன் மெச்சினவள் ரம்பையானால், ராஜப்பிரதிநிதி மெச்சினவள் ரம்பையின் பிரதிநிதி என்பதும் பொய்யாகுமா.?"

அதிகப் பிரஸங்கி.

# சங்கீத மஹா நாடு

(ஏ. என். கலியாணசுந்தரம், எம். ஏ)

மஹாநாடுகளுடன் வழக்கம்போல் கச்சேரிகளும் சம்பிரமமாய் நடந்தேறின. "பைன் ஆர்ட் ஸொஸைடியார்" கருமமே கண்ணாயிருந்து கச்சேரிகளை நடத்திக் காரியத்தை முடித்துக்கொண்டு விட்டார்கள். ஆனால் "சங்கீத வித்வத் ஸபை"யாரின் நோக்கமோ "மாடல் கச்சேரிகளை" நடத்திக் காட்டுவது. காரியத்திலோ "பணவசூல்" தான் முக்யமாகவிருந்தது.

பாடகர்கள் "முதல் ரகம், இரண்டாம் ரகம்" என்று பிரித்து, கச்சேரிகள் ஏற்பாடு செய்திருந்தனர். இரண்டாம் ரக வித்வான்கள் இளம் வித்வான்களாம். அவர்கள் முன்னேறுவதற்காக அவர்கள் கச்சேரிகளை ஏற்பாடு செய்தார்களாம். இளம் வித்வான்கள் என்றால், வயதிலா, சங்கீத ஞானத்திலா, அல்லது பண வசூல் விஷயத்திலா இந்த "இளமை" என்பது சந்தேகமாக இருக்கிறது. வயதில் என்றால், ஸ்ரீ. ஜீ. என். பாலசுப்ரமணியன், ஸ்ரீமதி சுப்பலக்ஷ்மி, ஸ்ரீமதி பட்டம்மாள் முதலியவர்கள் வித்வத் சபை அதிகாரிகள் கண்களுக்கு வயது சென்றவர்களாகத் தோன்றினார்களா? சங்கீத ஞானத்தில் என்றால், மதுரை மணியும், சுவாமிநாத பிள்ளையும், பால சுப்பிரமணியன், சுப்பலக்ஷ்மி, பட்டம்மாள் முதலியவர்களைக் காட்டிலும் ஞானத்தில் குறைந்தவர்களா? மேலும் சுவாமிநாதபிள்ளை, முதல் ரக வித்வானாக வித்வத் சபை மஹாநாடுகளிலேயே கச்சேரிகள் செய்திருக்கிறார். அவரைத் திடீரென்று இரண்டாம் ரக வித்வானாக மாற்றுவானேன்? இவ்விதம் சிலருக்கு "பிரமோஷனும்" மற்றும் சிலருக்கு "டி பிரமோஷனும்" செய்ததன் நோக்கம் என்ன? உண்மை நோக்கம் "பண வசூல் தானா?"

வயது சென்றவர்களை இளம் வித்வான்களாக மாற்ற, வித்வத் சபையின் சக்தி உண்மையில் பலிக்குமென்றால், அரியக்குடி, முசிரி, செம்மங்குடி, சித்தூர், செம்பை முதலியவர்களைத் தயவுசெய்து இளம் வித்வான்கள் கோஷ்டியில் சேர்க்கும்படி வேண்டிக்கொள்கிறேன். அப்படிச் செய்து, சபையின் சக்தியும் பலித்துவிட்டால், இந்த வித்வான்கள் திரும்பவும் தங்கள் இளமையைப்பெற்று பொது ஜனங்களைத் தங்கள் சங்கீதத்தால் இன்னம் 50 அல்லது 60 வருஷங்கள் சந்தோஷிக்கச் செய்யலாம் அல்லவா? "காயகல்பம் "மங்கி க்லாண்ட்" (Monkey Gland) முதலிய சிகித்ஸையின்றி இந்த லோகோபகாரம் செய்த புண்யம் வித்வத் சபைக்குக் கிடைக்கும்.

"மாடல் கச்சேரிகளில்" சில பிரபல வித்வான்களைக் காணோம். "டைகர், மஹாராஜபுரம்" இவ்விருவர்களையும் வித்வத்சபை மறந்ததன் காரணம் என்ன? "அதிகபால்யம், அல்லது அதிக விருத்தாப்பியம்" என்ற காரணத்தினாலா? நாகஸ்வர கோஷ்டியில் இளம் வித்வான்கள் இருப்பது அதிகாரிகளுக்குத் தெரியாதா?

சங்கீதக்கலைக்குப் புத்துயிர் அளிக்கும் நோக்கத்தை, சங்கீதக்கலையின் சில பகுதிகளில் தான், சபை நிறைவேற்றியிருக்கிறது. "சாஸ்த்திர சர்ச்சை, உபாத்தியாயர் பள்ளிக்கூடம், பத்திரிகை, புஸ்தகங்கள் அச்சிடுவது, சங்கீதப் போட்டிகள்" முதலியவைகள், கலைக்குச் சபை புரிந்த தொண்டுகளாம். இதைத்தவிர இன்னம் அநேகம் இருக்கின்றன. அவைகளில் முக்கியமாக "ஸாஹித்யம் இயற்றுவதை"ச் சொல்லலாம். பாட்டுப் போட்டி நடத்துவதுபோல் "பாட்டு இயற்றும்" போட்டியும் நடத்தவேண்டும். இங்கு

வான கடையில், ராகபாவம் கெடாமல், புதிய பாட்டுகள் இயற்றுபவர்களுக்குள் போட்டி ஏற்படுத்தி பரிசு அளித்து அவர்களை முன்னேறச் செய்யவேண்டும். தமிழ் பாஷையில் முதன்முதலாக "சுக்லாம்பரதரம்" குட்டிக்கொள்ளலாம்.

கதா காலக்ஷேபத்தை இதற்கடுத்ததாகச் சொல்லலாம். வரவரக் குறைந்து கொண்டிருக்கும் இதை அடியுடன் அழியாமலிருக்க இளம் வயதில் கதாகாலக்ஷேபக்காரர்களை சபை ஆதரிக்கவேண்டும். காலக்ஷேபம் எல்லாம் புராணக் கதைகளாகவோ அல்லது புத்தி புகட்டும் கதைகளாகவோ தான் இருக்கின்றன. சமூகத்தைச் சீர்திருத்தும் கருத்துள்ள கதைகளை ஏற்பாடு செய்யவேண்டும்.

'பரதநாட்டியம்' மறுபடியும் தமிழ் நாட்டில் தலைதூக்கக் காரணமாயிருந்தவைகளில் வித்வத் சபையும் ஒன்று. ஆனால் இதைச் சரியானபடி சபை ஆதரிக்காமல் இருப்பதன் காரணம் தெரியவில்லை. "உதயசங்கர் நாட்யம் 8000 ரூபாய் வசூல்; மேனகா நாட்யம் 7000 ரூபாய் வசூல்; கதகளி சென்னையைக் கொள்ளை அடித்தது" என்ற பேச்செல்லாம் நாம் கேட்கிறோம். "பரதநாட்யம் நடந்தது. ரூ. 2000 வசூல்" என்ற பேச்சே கிடையாது. "இது என்" என்று கேட்டால், "மற்றவர்கள் நாட்டியம் சீர்திருத்தம் அடைந்திருப்பதால் நன்றாக இருக்கிறது. பரதநாட்டியம் அவ்விதம் இல்லையே" என்ற பதில் உடனே கிடைக்கிறது. இதைச் சீர்திருத்தம் செய்யவேண்டியது யார் கடமை? தனக்கு மிஞ்சி அல்லவா தருமம்? வடநாட்டில் பரதநாட்டியத்தைப் பார்க்கக் கூட்டம் வருவதில்லை. இதனால் வடநாட்டு நாட்டியத்தை, நாம் ஆதரிக்கக்கூடாது என்று சொல்வதாக எண்ணக்கூடாது. வடநாட்டார் ஏன் இவ்விதம் அச்ரத்தையாக இருக்கிறார்கள் என்பதை அறிந்து நம்மிடம் உள்ள குற்றங்களை நீக்கவேண்டும் என்பதே என் கருத்து. இதை வித்வத் சபையார் செய்யாவிட்டால் வேறு யாரால் செய்யமுடியும்?

கர்நாடக சங்கீதத்திற்குப் புத்துயிர் அளித்துச் சென்னையில் மட்டிலும் உயிருடன் இருக்கச் செய்தால் போதுமா? மற்ற ஊர்களிலும் பரவச் செய்ய வேண்டாமா? அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யார் செய்வது? சங்கீத மஹாநாட்டை "கிருஸ்துமஸ் வாரத்தில்" சென்னையில் நடத்திவிட்டு, "ஈஸ்டர் வாரத்தில்" சங்கீத விழா ஒன்றை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி போன்ற இடங்களில், மாற்றி மாற்றி நடத்தினால் நோக்கம் நிறைவேறாதா?

"இதெல்லாம் செய்வதென்றால் பணம் வேண்டுமே. வித்வத் சபையில் பணம் அதிகம் இல்லையே" என்றால் பணம் சம்பாதிக்க வேண்டியது அவசியம்தான். எப்படிச் சம்பாதிக்க வேண்டும் என்று ஸ்ரீ கே. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யருக்கா சொல்லித்தர வேண்டும்? "பண நெருக்கடி" என்று சொல்லிக்கொள்ளும் காலத்தில், மஹாநாடுகளை வெற்றிகரமாக நடத்தி "பண மிச்சம்" காட்டும் ஸ்ரீ "கே. வி. கே"க்கு இது ஒரு கஷ்டமான காரியம் அல்ல.

இவ்விஷயத்தில் சங்கீத வித்வான்களும் சபையுடன் ஒத்துழைக்க வேண்டும். தேக சிரமம் மாத்திரம் போதாது. பண விஷயத்திலும் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும். கல்யாணக் கச்சேரிகளில் இரட்டிப்புப் பணம் வாங்கிக்கொள்ளட்டும். ரேடியோவில் சிறிது நேரம் பாடிவிட்டு முழுப் பணமும் வாங்கிக் கொள்ளட்டும். ஆனால் வித்வத் சபை விஷயத்தில் பாதிப் பணத்துடன் திருப்தி அடையவேண்டும். வித்வான்கள் சங்கீதத்தில் ஈடுபட்டவர்கள். சபையும் தன் நலன் கருதாது சங்கீதத் தொண்டில் ஈடுபட்டது. இவ் விஷயத்தில் வித்வான்கள், சபைக்கு சலுகை காட்டி, சங்கீதத் தொண்டு செய்து சங்கீத தேவியின் அருளைப் பெறவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

கடைசியாக, மஹாநாடு விஷயத்தில் போட்டி ஏன் என்று தெரியவில்லை.

(426-ம் பக்கம் பார்க்க)

# விதையொன்று முளையொன்று

(வி. வி. சிந்தாமணி எம்.ஏ.)

ஸர் ரகுநந்தர் மிகவும் விபாபசர். இங்கிலீஷில் எழுதியிருக்கும் அத்தனை புஸ்தகங்களையும் படித்திருக்கிறவரென்று வதந்தி. ஸர்வ கலாசாலையில் படிக்கும் போதே இங்கிலீஷ் புஸ்தகங்களை ஒன்று விடாமல் படித்தவராம். உத்தியோக மான பிறகும் தனக்கு எத்தனை அலு வல்களிருப்பினும் புஸ்தகங்களைக் கைவிடாமல் படித்து வருவார். ஆரம் பத்திலேயே உயர்ந்த உத்தியோகத்தில் போட்டி பரிக்ஷை மூலமாக புகுந்தவ ராகையால் பணத்திற்குக் குறைவில்லை. ஒவ்வொரு மாதமும் சீமையில் எத்தனை புஸ்தகங்கள் வெளியிடப்படுகின்றனவோ அவை தன் மேஜைமேல் பரப்பப்பட்டா வது இருக்கும்; அல்லது அலமாரியி லாவது ஏற்றப்படும். எச். ஜி. வெல்ஸ், ஜே. பி. பிரீஸ்ட்லி, ஹியூவால்போல், ரிசர்ட் சர்ச், என்பவர்கள் நேற்று எழு திய புஸ்தகங்கள் இன்று ஸர் ரகுநந்தர் கையிலிருக்கும்.

உத்தியோகத்திலும் பெயர் வாய்ந்த வர். அதிக விரைவில் மேன்மை பெற் றார். அவருடன் "ஸர்விஸில்" நுழைந் தவர்கள் மாகாணங்களில் "கலெக்டரா க"வோ "டெப்டி ஸெகிரிடெரி"யாகவோ இருந்து உழன்று கொண்டிருக்கும்போது ஸர் ரகுநந்தர் மட்டும் விரைவில் அதிகாரி கள் கண்களில் தென்பட்டு "ஸெலக்டட் போஸ்டு"களிலே உத்தியோகம் பார்த்து டெல்லிக்கு "கவர்னர் ஜெனரல் கௌன் ஸிலு"க்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இவ் விடம் வந்தார். அவரை வரவேற்க கூட் டம் ஜே ஜே என்று போயிற்று.

சந்திரஹாஸன் அதைப்பார்த்து மகிழ்ந்தான்.

ராமதாஸ் சந்திரஹாஸனைப் பார்த்து "ஏன்? நீ வரவில்லையா"யென்று கேட் டான்.

சந்திரஹாஸன் ஒன்றும் தெரியாதவன் போல், "எங்கே?" என்றான்.

"ஏன்? உனக்குத் தெரியாதா? நீ ஸர் ரகுநந்தரிடம் அதிகமாய் உறவு கொண்டாடுவது வழக்கமாயிற்றே? அவர் இன்றைக்கு இங்கு வருவதாக வதந்தி யைக் கேள்விப்படவில்லையா? ஏன் பாசாங்கு செய்கிறாய்? நீ வராவிட்டால் ரெயிலே ஸ்டேஷனுக்கு வருமோ என் பது ஸந்தேகம்," என்று ஏளனமாய்ச் சொன்னான் ராமதாஸ்.

சந்திரஹாஸனுக்கு தலை யிறக்கம்.

"ஏனப்பா வெட்கப்படுகிறாய்? உனக்கு அவர் நண்பரல்லவா? போன வருஷம் அவர் ஏதோ அவஸரமாக ஓடிக்கொண் டிருக்கும்போது நீ அவரது கண்ணுக் குத் தென்படவும், அவர் உன்னுடன் சேர்ந்து பேசிக்கொண்டே தன் காரியத் திற்குப் போனாரே? அது உனக்கு ஞாபகமில்லையா? எங்களுக்கு இன்னும் ஞாபகமிருக்கிறதே?" என்று ராமதாஸ் சொன்னதும், சந்திரஹாஸனுக்குக் கொஞ்சம் உயிர் வந்தது. முகத்திலும் களை ஏற்பட்டது.

சந்திரஹாஸன் இதுவரையில் எல்லோ ரையும்போல் மேல் விழுந்துகொண்டு ஒருவரையும் பார்க்கப்போனதில்லை. ராம தாஸ் முதலில் சொன்னதைப் பார்த் தால் தான் அப்படிப்பட்டவன் என்று அர்த்தமுண்டாக தலைகீழ் தொங்கிற்று. பிறகு சொன்னது நிஜமாகையாலும் கௌரவமானதாகையாலும் முகவாட்டம் குறைந்தது. தலைநிமிர்ந்து, ராமதாஸைப் பார்த்து,

"இல்லையப்பா, எனக்கு வேலையிருக் கிறது. வீடு போகவேண்டும்," என்று சொன்னான்.

"இதைவிட வீட்டில் என்ன முக்கிய வேலை, வீடு எப்போதுமிருக்கிறது. ஸர்

ரகுநந்தர் நாளைக்கு வருவாரா? உன் நன்மையை நீ கோரியவனுனல் இப்படி செய்யமாட்டாய்," என்முன் ராமதாஸ்.

"நீ சொல்வதிலிருந்து என்ன ஏற்படுகிறதென்முல் பெரிய உத்தியோகஸ்தர்கள் வரும்போது போகும்போதெல்லாம் அவர்களை நாம் போய் தெரிசிக்க வேண்டும் என்றும், அப்படி தெரிசிப்பதனுல் தான் நமக்கு உத்தியோகம் அபிவிருத்தியாகுமென்றும், தெரிசிக்காததனுல் நமது உத்தியோகம் க்ஷீணமடையுமென்றும் நீ எண்ணுகிருப் போல் தோன்றுகிறது," என்முன் சந்திரஹாஸன்.

"அதற்கு ஸந்தேகமா?"

"இந்த விவாதம் இப்போது செய்வது சரியல்ல. உனக்கும் நேரமாகி விடுகிறது. எனக்கும் வீட்டிற்கு நேரமாகி விடுகிறது. என் பாரியாளுக்கு உடம்பு அபாரமாயிருக்கிறது," என்முன் சந்திரஹாஸன்.

ஸர் ரகுநந்தனை நோக்கி ராமதாஸ் செல்ல, பாரியாளை நோக்கி சந்திரஹாஸன் சென்முன்.

ஸாவித்திரி கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தாள். குழந்தைகள் கொஞ்சிக் கூத்தாடி விளையாடிக்கொண்டிருந்தன. குழந்தைகள் பெறுவதில் சந்திரஹாஸன் குசேலனைப்போல்.

உடம்பு அதிகமாய் படுத்துக்கொண்டிருந்தாலும், ஸாவித்திரி லக்ஷணமுடையவள். முகம் சந்திர பிம்பம். தலை கோதி நெற்றிக் கிட்டுக்கொண்டு புடைவை ரவிக்கை புதிதாக அணிந்துக்கொண்டு சந்திரஹாஸன் வரவை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தாள்.

ஸாவித்திரியைப் பார்த்து, "உன் முகம் இன்றைக்கு அதிக வெளுப்பு" என்று சொன்னுன் சந்திரஹாஸன்.

"ஸந்தோஷத்தினுல்," என்முள் ஸாவித்திரி.

"இல்லை. இல்லை. ஜுரம் அடிப்பதினுல். ரத்தம் வற்றி யிருக்கிறது," என்முன் சந்திரஹாஸன்.

"உங்கள் புஸ்தகமும் வெளியாய் விட்டது. ஊரெங்கும் உங்கள் பேச்சாகவேயிருக்கிறது. இதைவிட எனக்கு என்ன பெருமை வேண்டும். இன்றை முதல் என் உடம்பு தேறிவிடும்," என்முள் ஸாவித்திரி.

"அசடே! இதிலென்ன பெருமை? பணம் அதிகமாய் சம்பாதிக்க வேணும். பெருமை எல்லாம் பணத்தினுல்தான். இதோ பார்! ஸர் ரகுநந்தர் இந்த ஊருக்கு கௌன்ஸில் மெம்பராக வருகிருராம். அவரை வரவேற்க கட்டுக்கட்டாய் ஜனங்கள் போகிருர்கள். மாலைகளென்ன, பழங்களென்ன அவருக்குப் போகின்றன," என்முன் சந்திரஹாஸன்.

"அவருக்கு இவ்விடத்தில் சிறப்பு; கற்றேருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு. உங்களுக்கு"—என்று ஸாவித்ரி சொல்லி முடிப்பதற்குள் சந்திரஹாஸன் கதறினன்:

"ஸரி, ஸரி. ரொம்ப ஸரி. உத்தியோகத்திற்கு இவ்வளவு தூரம் வந்திருப்பதே அவமானமாயிருக்கிறது. என்னைத் தன் ஊரில் விலை போகாதமாடு என்று ஏளனஞ் செய்கிருர்கள். இன்னும் சிறப்பு பெறுவதற்கு ஊருராய்ப் போகச் சொல்லுகிருய்."

"திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற சொல்லை மறந்து விட்டீர்களா?"

"எல்லாம் ஆடிப்பாடி ஓடியாய் விட்டது. இனி ஓடுவதென்முல் மூச்சு வாங்குகிறது," என்முன் சந்திரஹாஸன்.

"அதெல்லாம் போகட்டும். ஸர் ரகுநந்தர் உங்களுக்கு வேண்டியவர். அவர் உங்கள்புஸ்தகத்தைப்படித்திருப்பாரா?" என்முள் ஸாவித்திரி.

"எனக்கு அது தெரியாது. அனேக பத்திரிகைகளில் என் புஸ்தகம் விமர்சனம் செய்யப்பட்டிருக்கிறது. அவர் கண்ணுக்கு ஏதாவது தென்பட்டதோ இல்லையோ? அப்படி தென்பட்டபோதிலும் அவர் ஆல்டஸ் ஹக்ஸ்லியை வாங்குவாரே யொழிய என் புஸ்தகத்தை வாங்குவது ஸந்தேகம்."

"ஏன் அப்படி சொல்லுகிறீர்கள்?"

" இந்தியர்களுக்கு இங்கிலீஷ் எழுதத் திறமை கிடையாதென்றும், விமர்சனம் புஸ்தகத்தைப் போற்றும் பக்ஷத்தில் இந்தியர்களுக்கு விமர்சனமே எழுதத் தெரியாதென்றும், இங்கிலாந்தில் போற்றினால் பரியாதைக்கு எழுதப்பட்டிருக்கிறதென்றும், இந்தியர்கள் நினைப்பது வழக்கம். இந்தியாவை மாயை கவிழ்ந்துக்கொண்டிருக்கிறது. இந்தியர்கள் பிரமையில் மூழ்கி யிருக்கிறார்கள்,'' என்றான் சந்திரஹாஸன்.

அப்போது ஸாவித்திரி பெருமூச்சு விட்டாள். தள்ளாமை ஒருபக்கம், மன வருத்தம் மறுபக்கம்.

"போதும். இனி நம்மைப்பற்றி பேசியது போதும். நீ மனோதைரியத்தை உபயோகித்து உன் உடம்பை சரியாக்கிக் கொள், கவலைப்படாதே,'' என்றான் சந்திரஹாஸன்.

"ஸரி, ஒரு பேச்சு நான் சொல்லுவதைக் கேட்பீர்களா?" என்றாள் ஸாவித்திரி.

"கட்டாயம்,'' என்று பதிலளித்தான் சந்திரஹாஸன்.

" அவர் வந்தபிறகாவது, ஸர் ரகுநந்தரைப் பாருங்கள்,'' என்றாள் ஸாவித்திரி.

அதை ஒத்துக்கொண்டு நாலைந்து நாள் தவக்கப்பட்டு சந்திரஹாஸன் ஸர் ரகுநந்தர் வீட்டிற்குப் போனான். பல விஷயங்களின்மேல் ஸம்பாஷணை நடந்தது. சந்திரஹாஸன் புஸ்தகத்தின்மீது அவர் பேச்செடுக்கவில்லை. அரைமணி கழித்து போய்வருகிறேனென்று விடைவாங்கிக்கொண்டு வந்துவிட்டான் சந்திரஹாஸன்.

ஒருநாள் தன் புஸ்தக வியாபாரியைக் கண்டு ஸர் ரகுநந்தருக்குத் தன் புஸ்தக விமர்சனங்கள் அவ்வளவையும் அனுப்பும்படி கட்டளையிட்டான்.

புஸ்தக விமர்சனங்கள் அனுப்பப் பட்டன. தகவல் ஒன்றுங் காணோம். மறுபடியும் நாலைந்து நாளாயிற்று.

ஆபீஸ் தாழ்வாரத்தில் ஸர் ரகுநந்தரும் சந்திரஹாஸனும் அகஸ்மாத்தாய் ஸந்தித்தார்கள். இருவரும் புன்னகை நகைத்து நமஸ்காரஞ்செய்தது தவிர வேறே ஒன்றும் நிகழவில்லை.

மறுபடியும் நாலைந்து நாள் கழித்து சந்திரஹாஸன் ஸர் ரகுநந்தர் வீட்டிற்குப் போக தைரியஞ் செய்துகொண்டான். ஸாவித்திரி தன் எஜமானர் உத்தியோகத்தில் விருத்தியாகாததை யோசித்து ஏங்கி ஏங்கி நாளுக்குநாள் பலஹீனமடைந்து வந்தாள்.

ஸர் ரகுநந்தர் வீட்டைப் போய்ச் சந்திரஹாஸன் சேர ஸர் ரகுநந்தர் வேறு ஏதேதோ பேச்சுக்களைப் பேசிவந்தார். சந்திரஹாஸன் உத்தியோக விஷயமாயும் பிறகு விசாரிக்கத்தொடங்கினார். ஸமயம் வாய்த்துவிட்டது. காய்ச்சின இரும்பை இப்போதே அடித்தால் தான் நீளுமென்று நினைத்து எல்லாவற்றையும் சாங்கோபாங்கமாய்ச் சொல்லிவிடலாமென்று தீர்மானிக்கும்போது தைரியம் பின்வாங்கிற்று. ஸம்ஸாரத்தைப்பற்றி கேட்கும்போது சந்திரஹாஸனுக்கு கண்ணை மறைத்துக்கொண்டு நீர் படர்ந்தது.

"நான் புஸ்தகம் எழுதியிருக்கிறேனே, தெரியுமா?" என்று சந்திரஹாஸன் ரகுநந்தரைக் கேட்டான்.

" ஆமாம். ஏதோ சில விமர்சனங்களைப் பார்த்த மாதிரி ஞாபகம் வருகிறது. எதைப்பற்றி எழுதியிருக்கிறீர்?" என்றார் ஸர் ரகுநந்தர்

தன்னால் அனுப்பப்பட்ட விமர்சனங்களைக்கூட திரப்படிக்காதவருக்குத் தன் மேல் என்ன அபிமானம் இருக்கப்போகிறது என்ற ஸந்தேகத்துடன், " அது ஒரு கட்டுக்கதை,'' என்று கிணற்றிலிருந்து பேசுவதுபோல் தொனி குறைந்து சொன்னான்.

" கட்டுக்கதையா? அதைப் பார்க்க வேணும். எனக்குக் கட்டுக்கதைகளின் மேல் அவ்வளவாக மனமோடுகிறதில்லை. வயதாகி விட்டதோயில்லையோ? மத விஷயமாய் எழுதியிருப்பதிலும் தத்வத்திலும் தர்க்க வியாகர்ணங்களிலும் தான்

மனம் போகிறது," என்ருர் ஸர் ரகு நந்தர்.

இப்போது ஆல்டஸ்ஹக்ஸ்லி புஸ்தகமும், ஏச். ஜி. வெல்ஸ் புஸ்தகங்களும், ஜே. பி. பிரீஸ்டிலி புஸ்தகங்களும் சந்திர ஹாஸன் கண்ணுக்கு அலமாரியிலிருந்து எட்டிப்பார்ப்பதுபோல், தென்பட்டன. 'அவைகளை வாசிக்க மனம் ஓடும்போது ஏழை என்புஸ்தகத்தைத்தானு வாசிக்கப் படாது' என்று கேட்க மனம் பதறிற்று. அதற்கு விடை 'ஆம் அவர்கள் புஸ்தகம் கட்டாயம் மேல் தான்' என்று சொன்னல் தனக்கு அவமானமாயிற்றேயென்று தன் கேள்வியை யடக்கிக்கொண்டான்.

திடங்குறைந்தவனுய் வீடு திரும்பி வருகையில் தன் புஸ்தக வியாபாரியிடம் போய், "என் புஸ்தகத்தை ஸர் ரகுநந்தருக்கு அனுப்பு," என்று சொல்லிவிட்டு சந்திரஹாஸன் வீடடைந்தான்.

இதனுலாவது ஸாவித்திரி உடம்பு தேரி எழுந்துவிடலாமென்று அவளிடம் ஸர் ரகுநந்தர் தன் புஸ்தகத்தைப் படிக்க ஆவல் காண்பித்ததாகவும், அதை அனுப்பும்படி புஸ்தக வியாபாரிக்குக் கட்டளையிட்டதாகவும் சொன்னன்.

ஸாவித்திரிக்கு ஸந்தோஷம் அதிகரிக்க 'டெம்பரேசரு'ம் அதிகரித்தது.

தன் புஸ்தகத்தை ஸர் ரகுநந்தர் அங்கீகரித்ததாகவும், அதன் விலையைக் கொடுக்காததால் அடுத்த மாதம் 'பில்' அனுப்ப எண்ணங் கொண்டிருப்பதாகவும் மறுநாள் புஸ்தக வியாபாரி சந்திரஹாஸனுக்குச் சொன்னன்.

பத்துநாள் பிறகு சந்திரஹாஸன் ஸர் ரகுநந்தரைப் பார்த்தான்.

"உன் புஸ்தகம் வந்து சேர்ந்தது. சில இடங்களில் நன்ருகயிருக்கிறது. நான் கொஞ்சந்தான் படித்தேன். அதில் உன் கையெழுத்து வேணும்," என்று ஸர் ரகுநந்தர் சொல்லவும், இந்த புஸ்தகமாவது விற்பனையாகக்கூடாதா என்ற மனவருத்தத்துடன், பயித்தியக்காரனைப் போல் புஸ்தகத்தைக் கையில் வாங்கி, தான் அதை அவருக்கு அர்ப்பணஞ் செய்ததாக எழுதி அவர் கையில் கொடுத்து விட்டுத் திரும்பினன்.

வழியில் வரும்போது புஸ்தக வியாபாரியிடஞ் சென்ருன். முதல் தேதியாகையால் வியாபாரி 'பில்' அனுப்பத் தயாராயிருந்தான், அனுப்பிவிட்டானே யென்ற ஸந்தேகம் அதிகரித்து சந்திரஹாஸன் அவனைக் கேட்டான். இன்னும் அனுப்பவில்லை எனவே வாயில் பல்லில் ஈரம் வந்தது. "பில் அனுப்ப வேண்டாம். அதன் கிரயத்தை என்னிடத்தில் கொடுத்துவிட்டார்," என்று அவமானக்களையுடன் புஸ்தக வியாபாரிக்குச் சொன்னன்.

வழியில் வரும்போது மனம் அலை பாய்ந்தது. "எவ்வளவு அர்ப்பணந்தான் செய்யப்போகிறேன்! என்ன பிரயோஜனம்?" என்று எண்ணி எண்ணி வருத்தத்துடன் வீடு சேர்ந்தான்.

ஸாவித்திரியிடம் நடந்தவைகளை நடந்தமாதிரியே சொல்ல, அவள் மனமுருகி,

"நாம் விதைக்கிருேம். விளைவைப் பற்றி பொறுத்துப் பார்ப்போம்," என்ருள்.

அறுவடைகாலம் வரவில்லை. சந்திரஹாஸனுக்கு ஸாவித்திரியையும் தெய்வத்திற்கு அர்ப்பணஞ் செய்யுங்காலம் நேரிட்டுவிட்டது.

---

(422-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று ஆரம்பித்து மூன்ருயிற்று. ஒரே ஸமயத்தில் மூன்று மஹாநாடுகள் நடத்துவதால் பயன் என்ன? எல்லோருடைய முக்ய நோக்கம் "சங்கீதத் தொண்டே" எல்லோரும் நன்கு பழகின நண்பர்கள். இவர்களுக்குள் இந்தப் போட்டி ஒழிந்து ஒற்றுமை ஏற்படாவிட்டால் சங்கீதக்கலை முன்னேறுவது சந்தேகம்தான். இனியாவது இப் போட்டியை ஒழித்து, ஒற்றுமையுடன் சங்கீதத் தொண்டு புரிய வேண்டுமென்று இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன்.

# ஈசனருள்

(மாலதி)

சுமதி சிறிய பெண்தான். பனிரெண்டு வயது முடியவில்லை. செஞ்சிவப்பாய்த் தான் இருப்பாள். ஆனால் அழகிதான் அவள். அவள் விழி கருவிழியல்ல. பூனை முழி என்போமே அப்படித்தான். இருந்தும் அகன்ற விழியைச் சுழற்றி விழித்தால் அப்போது பார்த்துக் கொண்டேதான் இருக்கலாம்.

சிறிய குடத்தை இடுப்பில் வைத்து ஜில் என்று அவள் நடந்தால் சினிமா நடிப்பெல்லாம் எதற்கு? இவள் நடிக்கிறாளா? அவளுக்கு இயற்கையாய் அமைந்த அழகுநடை அது.செம்பட்டை மயிர்தான். நன்றாய் வாரி முன்பக்கம் சுருண்ட கேசம் வெட்டிவிட்டதுபோல் தோன்ற ஜிகினா ரிப்பன் வைத்து இடுப்புவரை தொங்கும் கூந்தல் அதன் பாரத்தால் இவளை ஆட்டுவதுபோல் தோன்ற இடையில் கட்டிய இளம் மஞ்சள் கதர்ப்பட்டுத் தாவணியுடன் விசிறி விசிறி வருவோரை விலக்குவது போல் இருக்கும். பட்டணத்துப் பெண் அவள்.......

"அதென்ன! ஆடி வருகையிலே என் அங்கம் குளிருதடீ!...யார் அது!" சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒருவருமில்லை. "மேனி அழகைக் கண்டால் கண்ணம்மா, மெய்யும் சிலிர்க்குதடீ..." என்கிற சப்தம் மறுபடியும கேட்டது. "ஆஹா என்ன குரல் இது! ஒருவேளை என்னைக் கண்டுதானா? இந்தப்பாட்டு—கில்லாடித்தனமா? சீ...யாரையும் அறியாது நினைப்பது பாவம். எப்படி இருந்தால் என்ன? பாரதியார் பாட்டு என்ன உருக்கம்! ஏன் ஒரு உத்தமச் சிறுவனாய்த்தான் இருக்கக் கூடாது? ஒருவரையும் காணோமே...இந்தத் தோப்பில்தான் இருக்கவேண்டும். இதன் சொந்தக்காரர் யாரோ?..."

பனிரெண்டு வயசு முடியவில்லை சுமதிக்கு இவ்வித யோசனை ஏன்? உலகத்தை என்ன கண்டாள் இவள்?. காணுமலென்ன. பத்திரிகைகளும் சினிமாவும் எதற்காக? விபரம் தெரியாது பத்து வயது முதலே இப்படி அப்படி என்று அல்லல் படத்தானே....

எங்கள் காலத்தில் சட்டம் எதுவுமில்லை. பத்து வயதிற்குள் கலியாணம் முடிந்து அலுக்கச்சலிக்க நலங்கு ஊஞ்சல் வேடிக்கைகள். இவ்விதமே குறைந்தது பதினாறுவயதாவது ஆகும். வாழ்க்கையில் ஈடுபட்டும் இருவருக்குமிடையில் சங்கோசம், நாணம், என்று அர்த்தமில்லாத இரண்டொரு வருஷம் கடந்துவிடும். காதல், காதல் என்கிறார்களே, அக்காதலை அறிய இருபது வயது...ஏன் இன்னும் கூடவே ஆகும். இவ்விதம் சென்றது எங்கள் காலம்......இப்போது ஒன்பது வயதில் உலக விஷயங்களை அறிந்து கொள்ள ஆவலுறுகிறது. "தெரிந்து கொண்டு அப்படி அஸ்வத்தம்மா வாட்டம் முகத்தை வச்சுக்கணம் இப்படிக் கண்ணை சுப்புலக்ஷ்மி மாதிரி சிமிட்டணும்," இதெல்லாம் குழந்தை புத்தியிலும் ஊன்றிவிடுகிறது. இன்னும் எத்தனையோ தேர்ச்சிபெற்ற இந்நாளில் பனிரெண்டு வயது சுமதி நினைத்ததில் ஆச்சரியம்தான் என்ன?

வலயப்பட்டி குடியானக் குப்பன் மகன் ராமசாமி தாயில்லாப் பிள்ளை. குப்பன் அன்பிற்கும் பாத்திரமானவன் அவனே. குப்பனுக்கு ராமசாமியைத் தவிர வேறு சுற்றத்தார்கூட இல்லை. ஆனதால் தாயற்ற தன் ஒரே பிள்ளை ராமசாமியை அன்புடன் வளர்த்தான்.

ராமசாமி இயற்கையாகவே கட்டுக் குடுமியும் கம்பீரத் தோற்றமும் உடையவன். சுருசுருப்பான வேலையில் அவ

னுக்கு ஆவல் அதிகம். பணக்காரக் குப்பன் பையனைப் படிக்கவும் வைத்தான். படிப்பிலும் கெட்டிக்காரன் அவன். பாரதி பாடலில் அவனுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. எல்லாம் மனப் பாடம். எப்பொழுதும் குஷியாகவே தான் இருப்பான். அவனுடைய எதேச்சை அவனைக் கெட்டவனுக்கிவிட வில்லை...பரந்த எண்ணங்களுக்கே அவன் மனதில் இடம் வைத்திருந்தான்.

குப்பனுக்கு இதைவிட என்னவேண்டும்? பத்து ஏக்கர், நஞ்சை நிலத்திற்கும் இரண்டு தோப்பிற்கும் சொந்தக்காரன்; ராமசாமி, பாப்பாரப் பிள்ளை கணக்காக! அவள், பார்க்ககொடுத்துவைக்கவில்லையே! அதை எண்ணும்போது தான் கொஞ்சம் வருத்தமாய் இருக்கிறது.

என்னமோ சடுதியாக கலியாணத்தை பண்ணிவிடவேண்டுமென்று சிறிதுகாளாகவே குப்பனுக்கு எண்ணம். தங்கள் இனத்தில் அவனுக்குச் சரியான பெண் இல்லையே, இது அவன் மனதில் போராடும் கவலை......

தேவதாசி, வம்சத்தவள்தான் தவமணி. இருந்தும் இவள் பாட்டன் காலம் முதலே...பெண்களை ஒருவனுக்குக் கட்டிக்கொடுத்து அவள் ஒருவனுடனேயே வாழ்க்கை நடத்தும்படியான ஏற்பாட்டைச் செய்துகொண்டார்கள். ஆரம்பத்தில் ஜாதிக்காரர்கள் கேலி வெகுவாக இருந்தது. நாளடைவில், ஏன் தவமணியின் தகப்பன் தன் தங்கையைக் கட்டிக் கொடுத்தபோதே சிறிது அடங்கியது. சிலர் இது நீடிக்காது என்றும் சொல்லிக் கொண்டார்கள். என்னமோ மூன்று தலைமுறையாகவே கஷ்டமோ சுகமோ ஒருவனுடனேயே அவர்கள் வாழ்வு கழிந்தது.

அந்த இனத்தில் தவமணி தான் துர்பாக்யவதி; பெரிய போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னம்பலத்தை மணந்தும், மணம் கொண்ட மூன்றும் வருஷத்திலேயே அவன் வாழ்வு தீரப்பெற்று இவள் தனியானள். அப்போது சுமதிக்கு ஒரு வயது தான்......

தவமணி தன் தம்பி தணிகாசலம் வீட்டிற்கு வந்திருந்தாள் தன் சொந்தக் காரியமாக......தவமணியின் நிலங்களில் சாகுபடி சரியில்லாததால் வாய்தா கொடுக்கமுடியவில்லை. அது விஷயமாக கிராமமுன்ஸீப்பின் யோசனையைக்கேட்க தவமணியும் தணிகாசலமும் முன் தினம் தான் இவ்வூருக்கு வந்தார்கள்.

'பட்டணத்துக்காரங்க வந்திருக்காக!' ஊரில் இது ஒரு வேடிக்கை. சுமதியைக் கண்ட சிறுமிகள் குசுகுசு எனப் பேசிக் கொண்டார்கள். கோணவகிடு குதிகாலு செருப்புடன் முனிஸீப் வூட்டுக்கு பட்டணத்திலிருந்து வந்திருக்கிறுள். மாமன் பொன்னுசாமி தான் முன்ஸிப். விவசாயிகளின் துயரைப் போக்கத்தான் காங்கிரஸ் கவர்ன்மெண்ட் ரொம்ப முயற்சி எடுத்திருக்கிறது. அதை அவள் பத்திரிகையில் படித்திருந்தாள். இப்பொழுது சர்க்காரில் கடன் வாங்கித்தான் தீர்வை கட்ட வேண்டும். அதற்குத்தான் யோசனை "கேட்க" வந்தாள் மாமனிடம்.

குடியானவனில் பணக்காரன் குப்பன் தானே; ஊரில் அவனுக்குத் தெரியாதது ஒன்று மிருக்காது. அப்படியே கணக்கய்யா மூலமாக முனிஸீப்பு அய்யா வீட்டுக்கு அவங்க வந்த சேதியைக் கேள்விப் பட்டான் குப்பன்; என்றும் முனிஸீப்பு அய்யாவீட்டுக்கோ கணக்கய்யா வீட்டுக்கோ யாராவது விருந்தாளி வந்திருப்பதாகக்கேள்விப்பட்டால் உடனேகுப்பன், தயிர், பால், காய்கறி, இலை முதலான தன்னுல் கொடுக்கக்கூடிய சாமான்களை அவர்கள் கேட்கவேண்டு மென்பதில்லாமல் அனுப்பிவிடுவான். இதனுலும் குப்பனிடம் அவர்களுக்குப் பிரியம் உண்டு.

'என்ன குப்பா, என்ன விசேஷம்' என்றுர் பொன்னுசாமி, என்றையும் விட சந்தோஷமாகவே...குப்பனுக்கு பெருமை தாங்கவில்லை. "விசேஷமென்னங்கோ...நாயிக்கு, என்னச்சும் வேணும்னு கொண்டார்ரேன், இளநீ... இளநீ...எதாச்சும்..." என்றுன். அதை எல்லாம் லக்ஷியம் செய்யாமல் பொன்னு

சாமி "குப்பா உன் மவனுக்கு கலியாணம் எப்போ?" என்று கேட்டான்.

சந்தோஷத்துடன் கலந்த மரியாதையுடன் கும்பிட்டு "எசமான் அறியாத கண்ணாலம் ஆயிடுமா? அதுதான் கவலையா இருக்குதுங்க. அவனுக்கு சரியா......பொண்வேணும். என்னமொ நான் சொல்ரென்னு நினைக்காதிங்க. எங்க வூட்லே பொரக்கர புள்ளெயா அது அதுக்கு எசஞ்சாப்பலெ, எங்கெ இருக்குதோ. ஆண்டவன்தான் காட்டணும் ஒண்ணெ......"—வணக்கத்துடன் கூறினன்.

"கோவிச்சுக்காதே...குப்பா நான் ஒன்னு சொல்ரேன் கேப்பயா!"

"எசமான் சொல்லி கேக்காமெ நாயிக்கு என்ன வந்திடுச்சு."

பொன்னுசாமி தீர்மானித்தவர்போல் சொன்னர்..."குப்பா! எங்க வூட்டு பொண்ணெ கட்டப் பிரியமா? சொல்லு ரதிக்கணக்கா ஒரு குட்டி இருக்கு. என்ன சொல்ரெ?..."

"கட்டிக்கிட்டா என்னங்க; என்னமோ அவனுக்கு எசஞ்சதா இருந்தா போதும்; என் மவன் நான் சொன்னத்தை தட்டிப் பேசமாட்டான்..."

"குட்டியைப் பார்!...சுமதி" என்ருர். வந்து நின்ருள் சுமதி.

"உனக்கு கலியாணம்" என்ருர் பொன்னுசாமி. வெட்கம் தாங்கவில்லை அவளுக்கு.

குப்பனுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. "நம்ம இனத்துக்குள்ளே, நம்ப மவன் ராமசாமி பணக்காரன்; படித்தவன். தகப்பன் பேச்சைத் தட்டாத நல்ல புள்ளேன்னு பேரெடுத்துட்டான். அழகான பொண்ணும் கிடைச்சுடுச்சு. அவனேக் கண்டா இனத்தாருக்கெல்லாம் கொஞ்சம் எரிச்சலாக்கூட இருக்கும்"... இதை நினைக்கும்போது உடம்பு சிலிர்த்தது. "அதுவெ எதாச்சும் கெடுதி வந்திடுமோ? சீ நாம ராங்கியா ஆளுங்களே மதிக்காமெ இருந்தாத்தானே நம்ம மேலே வருத்தப்படுவாங்க......அது இல்லாமெ எல்லாருகிட்டேயும் நேசமா பழகினு யாரு என்ன நினைக்க இருக்கு... அழகுக்கு ஆசைவச்சு வேறு குலத்துலெ பொண்ணெடுத்தான்னு சொல்லிக்குவாக. எதெவேணு சொல்லிக்கிட்டம், என் மவன் சுகமா இருக்கணும். அது என் கடமை நான் செஞ்சுப்புடரென்." இந்த நினைவுதான் அவன் மனதில்

குப்பன் வீடுசேர்ந்து ஒரு நாழிகையாகியும் ராமசாமி இன்னம் வரவில்லை. "பொழுது விடிந்து போச்சு. இன்னம் எங்கோ சுத்திக்கிட்டு இருக்கான்? எங்கே லச்சர் கிச்சர்னு போயிருக்கானே...... நமக்கு என்ன தெரியுது அவன் தொரை மவன் கணக்கா இருக்கான்."

"அப்பா" என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தான். "ஒரு யோகி ஒரு பாட்டு பாடினர். அதை கேட்டுக்கிட்டிருந்ததில் பொழுது போனதே தெரியலெ. தெருவெல்லாம் ஒரே கூட்டம். ஆஹா என்ன பாட்டு அப்பா, நீ கேக்கலேயே."

"அப்படி என்னப்பா பாட்டு. அதுக்கு என்ன அர்த்தம்?"

"ஸ்ரீனிவாசா என்னு உன் பாதம் காண்பேன் என்பது அந்தப் பாட்டின் அர்த்தம். கன்னடப் பாட்டு. அவரைப்போலே அப்படியே பகவானே நினேச்சுக்கணும். என்ன ஆசைபாசம்னு அலேயணும்னு தோணுது. நீ கேட்டா உருகிடுவே"

"எல்லாருமே வேதாந்தம் படிச்சு வைகுண்டம் போன....அங்கேயும் திண்டாடணும் தெரியுமா! இங்கே திண்டாடுவது போராதுன்னு; நீ கொழந்தப் புள்ளெ. இப்பவே அந்த வேதாந்தமெல்லாம் படிக்கவேண்டாம். என்னேப்போல் வயசு கடந்தவனுக்குத்தான் அதெல்லாம். இதுகூட பாரு, உன் விசாரம் உன்னே ஆளாக்கியாச்சு. வீடுவாசல்னு நீ ஒத்தியைக் கட்டிக்கிட்டு சம்சாரம் நடத்தப் பாத்துட்டா விசாரம்ஒழியும்."

"அப்புறம் கொளந்தெ குட்டின்னு பொரக்கணும் அப்புறம் அந்தக் கொளந்தெ வவுத்துலேஒன்னு. ஏம்பா... என்னேப் பரியாசம் பண்ணுதே."

"நீ கொளந்தெ உன்னை வளத்து ஆளாக்க நான் பட்ட கஷ்டம் நேக்குன்னா தெரியும். அதுக்குப் பலனா! என் ஆயுசு பரியும் என் மவன் என் சொல்லெல தட்டாமெ நடந்தாப் போதும். அதுவே மோக்ஷம் கிக்ஷம் எல்லாம்."

"என்னப்பா. நான் ஒனக்கு தெய்வமா? அப்பா?"

"தெய்வத்துக்கு மேலேடா கண்ணு. தெய்வத்தைக் கஷ்டம் வந்தால் துதிப்போம். இல்லாவிட்டா கள்ளுக்கடை எங்கே, கார் சாவரி எங்கென்னு சுத்துவோம். உன்னென்னா, வுட்டுட்டு, வெளியிலே போனாலும் வாசல்லே போனாலும் மவன் என்ன செய்யுதோ...யாரு கிட்டெ சண்டை பிடிக்குதோ...எவங்க தாயில்லாப் பிள்ளை யின்னு திட்டுவாங்களோ... பசின்னு பறக்குதோ? இப்படி எல்லாம் வேதனை வரும். இப்படி சாமி மேலே புத்தி போவுதா?"

"ஆமாம் அப்பா, நேக்கும்தான் நினைவு வந்தது முதல் தோணும். அப்பா சும்மா கஷ்டப் படரார்னு. இனிமே இப்படி கவலை வெச்சுக்காதே அப்பா.

"என் கட்டி மகனே! ஒனக்கு கொளந்த பொறந்து பொளச்சிருந்தா, நீ வுட்டுடு அநத ஆசபாசத்தெ எல்லாம்...என்னாலெ முடியாது. நான் ஒண்ணு சொல்லப் போறேன் அதைக் கேளு......என்னப்பா! உனக்குப் பொண்ணு பாத்திருக்கேன்... ரோஜாப்பூ... கணக்கா இருக்குது. முனிஸீப்பு அய்யா வூட்டுலெ வந்திருக்குது. நீ பாக்கணும்னா, கூட்டிக்கிட்டு வரச்சொல்ரேன். நான் எல்லாம் பேசி முடிச்சுட்டேன்."

"என்னப்பா? முன்ஸீப் வீட்டிலா?"

"ஆமாம் என் அப்படிக் கேக்கரே? அவங்க ஜாதிக்கும் நம்ம ஜாதிக்கும் கட்டா வழக்கம் உண்டா? நம்மவங்க ஏதாச்சும் சொல்லமாட்டாங்களா அப்பா!"

"ராமசாமி, நீ படித்த பிள்ளை. நீயே இப்படி பயப்படரயே பாப்பார ஜனமெல்லாம்...கலப்பு மணம்னு பண்ணாக. எங்கே பார்த்தாலும் ரொம்ப நடக்குது. கணக்கய்யா பொஞ்சாதி, அவுங்க சாதியா! அப்படி யெல்லாம் இருக்கும்போது நமக்கென்ன வந்தது. அவுகளும் பரவாயில்லை. மூணு தலை முறையா...ஒழுங்கா இருக்கரவங்க. நாம் காசுக்கு ஆசைப்பட்டுச் செய்யரமா?...அதுவுமில்லை. உனக்கு ஏத்த குட்டி. உன் இஷ்டம் என்ன? சொல்லு."

"என்னப்பா இப்படிக் கேக்கரே? நீ சொன்னா மறுத்துடுவேனா? உனக்கு இஷ்டம்னா எனக்கும் இஷ்டம் தான்..."

பணமுடையால் ... யோசிக்கப்போன இடத்தில் பெண்ணிற்கு மணம் முடித்தாள் தவமணி. சர்க்கார் கடன் இல்லாமல் கிஸ்த்து கட்டி நிலத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டான் குப்பன்.

ஆடிவந்த கண்ணம்மாவே ராமசாமியின் மனைவியானாள். தன் படிப்பையும் தன் மனைவியின் புத்தி சாதுர்யத்தையும் வெளியிட்டு நல்வழியில் தன் ஊரிலேயே பயன்படுத்திக் கொண்டான் ராமசாமி. குறுகிய மனமுடைய சேரி ஜனங்களை ஒழுங்குபடுத்தி நல் ஒழுக்கத்தை உபதேசித்து, அவர்கள் மனதைத் திருப்பி, அவர்களுக்கு படிப்பின் வாசனையை அறிவிப்பதற்காகவே தான் பிறந்ததாக நினைத்து கிராம சேவை செய்தான் ராமசாமி. சுமதியும் பங்கெடுத்துக் கொண்டாள். சுமதி தன் அழகான பெயருக்கேற்க யாவரிடமும் அன்பாய்ப் பேசுவதும், ஒழிந்த வேளையில்தான் பட்டணத்தில் கற்றுக்கொண்ட கைவேலை, படம் வரைதல், பூப்போடுதல் முதலியவைகளையும் பள்ளிப் பெண்களுக்கு போதிக்கச் செல்வாள். சோம்பலின்றி தன்னுடைய வேலைகளைக் கவனிப்பதல்லாமல், ஊர்ப் பெண்களையும் தன்வயப்படுத்திக் கொண்டு ஒருவரும் தன்னை ஏசாதவாறு, சொந்த சுகம்தான் பெரிதென எண்ணாமல் புருஷன் மனப்படியே நடந்துவருகிறாள். இது வன்றோ மனதிற்கிசைந்த மணம், குணத்திற்கேற்ற கொழுநன் என்பது.

---

# பாட்டியின் டைரி

(ஆர். பங்காருஸ்வாமி)

"அடே இராஜம், யாரெல்லாமோ அவாள் நித்தியம் சேஞ்சது, இருந்தது, போனது எல்லாத்தையும் சேத்து எழுதி அதுக்குப் பேர் என்னமோ சொல்லராளே நோக்குத் தெரியுமா?" என்றாள் பிரஸித்தி பெற்ற கரடிப் பாட்டி.

"அதுக்குப் பேர் டைரி" என்று வினயமாய் விடை பகர்ந்தேன்.

"என்னது? டைரி...டிய்ரி...டய்ரி... என்ன வேணுமோ வச்சுக்கோ. அன்னிக்கேபிடிச்சு சொல்லு சொல்லுங்கிறியே சொல்றேன். வேணும்னு எழுதிக்கோ" என்றாள் பாட்டி.

"நான் உன்னுடைய ஸ்டெனோகிராபராய் இருக்கிறேன்" என்றேன்.

பாட்டிக்குக் கோபம் மூக்கில் வந்து விட்டது.

"என்னடா பேனாவை எடுத்துண்டு மசிக் கூட்டிலே மசியைத் தோச்சுண்டு கடுதாசியிலே நான் சொல்றத்தை எழுதிக்கோன்னு என்னமோ தஸ் புஸ்ங்கிறியே?"

"இல்லே பாட்டி நான் உன்னுடைய குமாஸ்தாவாக இருக்கிறேன்னுன்னு சொன்னேன்"

"குமாஸ்தாவுமாச்சு மைதாமாவுமாச்சு" என்றாள். துர்வாஸ மஹரிஷியின் பரிபூர்ண அனுக்கிரஹத்திற்கு பாத்திரமான கரடிப் பாட்டியின் கோபத்திற்கு ஊரெல்லாம் பயப்படும் போது நான் எம்மட்டும்! உடனே எழுத ஆரம்பித்தேன்.

"காலங்கார்த்தாலே எழுந்திருந்தேன்.. எழுந்திருந்தேனா?... எழுதிண்டயோ... உம்....தீக் குச்சியை எடுத்தா பிடிக்க மாட்டேன்னுடுத்து....அஞ்சுகுச்சிசெல வழிச்சுதுக்குஅப்புறந்தான் விளக்கேத்த முடிஞ்சது. ஆத்தைப் பூரா பெருக்கி மொழுகி தொடைக்க நாலு நாழி ஆச்சு...காக்கா எச்சம் கோழி எச்சம் விடராப்பலே நாலுங் கடக்க நடுவிலே தூப்புக் காரியைக்கொண்டு அரைக்கால் நாழிகை மொழுகிப் பெருக்கினா எப்படி இருக்கு!...அய்யே...அப்பரம் இரண்டு எழை கோலம் போடுவம்னு பார்த்தேன். கோலப் பொடி இல்லை. அடுத்தாத்து சீதைட்டே போய் இரண்டு பொடி கேட்டேன். 'கோலப்படியாத்தான் போச்சு. இடிக்க யாருக்குத் தள்ளரது நம்ப காலமா' என்றாள் சீதை. எனக்குக் கோபம் வந்துடுத்து. 'இரண்டு கோலப் படி கொடுத்தால் கொரஞ்சுடுமா? இல்லாதபடிக்கா வாசல் பூரா கோலம் போட்டிருக்காய். உங்கிட்டையும் நான் கேக்க வந்தேனே. குடுக்கறதும் வாங்கறதும் வண்ணாக்குடியிலேதான்னு சொன்னேன் போலிருக்கு. இம் மடுத்தான் வந்துட்டா வாயைக் காட்டிண்டு. என் வீடு வண்ணாக் குடியா என்னத்துக்கு இருக்கப்போரது ஒன் வீடுதான் சலுப்பக்குடி' நான் இரண்டு வார்த்தை சொல்லிப்பிட்டு இந்த எச்சக்கலைட்டே போய் நாம் ஏன் கேட்கப்போனேன்னு எண்ணிண்டு ஆத்துக்கு வந்து தோண்டியையும் கொளவாத்திரத்தையும் எடுத்துண்டு வாக்காலுக்குப் போனேன். போனேனா? எழுதிண்டயாடா....அப்பா! இந்தக் காலத்துப் பொண்டுகள்தான் என்ன வம்பளப்பு, என்ன வீணளப்பு பண்ணருது, புக்காத்து ஊராச்சே, புக்காத்து மனுஷாள் வருவாளேன்னு உடம்புலே ஒரு கூச்சம், ஒரு பயம்? அந்த பட்டணத்துக்காரி இருக்காளே...என்னமோ புதுப்பேர் வச்சுண்டு...என்னது வரமாட்டேன்கிறது. ஆம். வனசவல்லி...வறுக்கட்டை வல்லி ...அவள் கோணத்தலையும், மூஞ்சியிலே முக்காத்துட்டகலம் பொட்டும், தனுக்கச்சி மாதிரி மூக்கிலே திருகும், அவள் தத்துப் பல்லும், வாயும், பனங்காய்

போலே ம்ரும்...என்ன குலுக்கு என்ன பிலுக்கு...அந்தப் பிசாசு என்னமோ லெக்சர் பண்ணிண்டிருந்தது. அவள் தேகத்துள்ளே சரீரம் பூந்திருக்காம்...சாதம் வேண்டிருக்கல்லியாம்... காப்பித் தண்ணியை மொண்டு மொண்டு குடிச்சு வயத்தே ரொப்பிட்டா சாதம் எங்கே வேண்டி யிருக்கும். டாக்டர் ஆப்பரேஷன் பண்ணிக்கணம்ங்கறாராம். சேச்சி பக்கத்திலே குளிச்சுண்டிருந்தாள். அவள் என்னடி லெக்சர் பண்ணறான்னு கேட்டேன். சேச்சிட்டே கேட்டா இந்த வறுகக்கட்டைக்கு என்ன. 'பாட்டி வலிச்சு கிலிச்சுக் காட்டினேளோ பாத்துக்குங்கோ'ன்னுது. 'வலிச்சுக் காட்டரதுக்கு எங்கிட்டே வலிப்பு எங்கே இருக்கு. ஈசுவரன் தான் ஒருத்தருக்கும் கொடுக்காமல் அம்மட்டையும் உங்கிட்டே கொடுத்துட்டானே'ன்று சொன்னேன். இதுக்குள்ளே சேச்சி இந்தக்காலத்துச் சின்னதுகள்கிட்டே வாக்குக் கொடுக்கப்படாதுன்னு எங்கிட்டே சொல்லி, அந்த வறுகக் கட்டைகிட்டேயும் பெரியவாள்டே பேச்சுக் கொடுக்காதேன்னு சொல்லி அமத்தினுள். இதுக்குள்ளே செம்பகம்ன்னு ஒரு கொரங்கு இருக்கே அது புரந்தாத்து சீமந்த சீர்வரிசைகளைப் பற்றி இராமாயணம் பாட ஆரம்பிச்சுடுத்து. இது எதிராளாத்துச் சங்கரிக்குப் பொருக்கல்லே. அவள் காத்தனூர் பொண்ணுக்கு சேஞ்ச சீர்லே ஆயிரத்திலே ஒண்ணு கூட இல்லேன்னு ஒரு கொடி நொடிச்சுட்டா. நான் ஆத்துக்கு புரப்படரதற்காக கம்பை பார்கிறச்சே காணல்லே. எந்த மூதேவியோ எடுத்து ஒளிச்சுபுடுத்து.. இந்த காசமாய் போர ஊர்லே.........

"கிடக்கிறது பாட்டி ஊரை வையாதேயுங்கோன்னு அந்தக் கமலம் தண்ணிக்குள்ளே இருந்து எடுத்துகொண்டு... எழுதிண்டயா...உம்...அதுதான்......"

குர்...குர்குர்ர்...ர்ர்.

பாட்டி கொரட்டைவிட ஆரம்பிச்சாச்சு.


# பாரத மணி

**சந்தா**

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. 4 | (தபால் செலவு உள்பட) |
| வெளிநாடு | ரூ. 6 | (தபால் செலவு உள்பட) |

தனிப்பிரதி விலை 1 அணு.

**விளம்பரம்**

இந்தியாவில் செய்யப்பட்ட சுதேசி சாமான்கள் விளம்பரப் படுத்த விசேஷ வசதி அளித்திருக்கிறது. ⅛ பக்கம் (பத்து வரி) விளம்பரங்கள் ஒரு தடவைக்கு ரூ. 2 வீதமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

நீடித்த ஒப்பந்த விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

**மானேஜர்.**

# விமர்சனம்

தேவி சௌதுராணி: ஆசிரியர் பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாய; மொழிபெயர்ப்பாசிரியர்: கு. ப. ராஜகோபாலன். அல்லயன்ஸ் கம்பெனி வெளியீடு.

பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயருடைய நவீனங்களெல்லாவற்றையும் போல இதுவும் ஓர் சிறந்த நவீனம். மூல ஆசிரியர்கொண்ட கருத்தினை மொழிபெயர்ப்பாசிரியர் சிறிதளவும் விடாமல் கையாண்டிருக்கிறார். கதை முதலிலிருந்து கடைசிவரையிலும் படிக்கப்படிக்க சுவாரஸ்யமாக இருக்கிறது. கதையில் வரும் ஸாகரா, விரஜன், ஹரிவல்லபர் முதலிய பாத்திரர்களை இயற்கையாகவே சித்தரித்திருக்கிறார் ஆசிரியர். சக்களத்தியாக இருந்தாலும், ஸாகரா, தேவிக்கு "காதலர் இரவில்" காட்டிய அன்பு துல்லியமானது. இதை ஓர் சாதாரண நவீனம் எனக் கூறுவதைவிட "ஆனந்தமடத்தை"ப்போன்ற சரித்திர சம்பந்தமான நவீனம் எனக் கூறுவதே சிறந்தது. மொழிபெயர்ப்பு நன்றாக இருக்கிறது. மற்ற வெளியீடுகளைப்போல இதுவும் நல்ல முறையில் அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழ் அபிமானிகள் வாங்கி வாசிக்கவேண்டிய புஸ்தகங்களில் இதுவும் ஒன்று.

தேவதாஸ்: ஆசிரியர்: சரத் சந்த்ர சாட்டர்ஜீ;— மொழி பெயர்ப்பாளர்: அ. கி. ஜெயராமன். நவயுக பிரசுராலயம் வெளியீடு விலை ரூ. 1—0—0.


## உங்களுக்குத்தான்!

| | | | |
|---|---|---|---|
| ஜெக்கோஸ்லோவேகியா | (ஸ்ரீ வே. சுவாமிநாத சர்மா) | 1 | 0 |
| மாகாண சுயாட்சி | (ஸ்ரீ எ. என். சிவராமன்) | 0 | 8 |
| ஹிட்லர் | (ஸ்ரீ வே. சுவாமிநாத சர்மா) | 2 | 4 |
| கெமால் அத்தாதுர்க் | (ஸ்ரீ வே. சுவாமிநாத சர்மா) | 1 | 8 |
| முக்கிய அரசியல் திட்டங்கள் | (ஸ்ரீ ந. ரா. சுப்பையர்) | 1 | 8 |
| ஹிட்லரும் மஹா யுத்தமும் | (ஸ்ரீ எ. ஜி. வெங்கடாச்சாரி) | 1 | 4 |
| பாஸிஸ்டு ஜடாமுனி | (ஸ்ரீ சோ. விருத்தாசலம்) | 1 | 8 |

(ஆர்டர்களுடன் முன் பணம் அனுப்பவேண்டும்)

சுவேதாரண்ய ஆசிரமம் 7, வடக்குமாட வீதி, மைலாப்பூர் சென்னை.



## நீங்கள் வாசிக்க!

| | | | | |
|---|---|---|---|---|
| தேச பக்தன் கந்தன் | | கே. எஸ். வெங்கடரமணி எம்.எ., பி.எல். | 1 | 0 |
| முருகன் ஓர் உழவன் | (மொழி பெயர்ப்பு) | கிருஷ்ணகுமாரி | 1 | 8 |
| இரட்டை மனிதன் | ,, | ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் | 0 | 8 |
| துர்க்கேசநந்தினி | ,, | ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் | 1 | 4 |
| விஷ விருக்ஷம் | ,, | ஸ்ரீ டி. என். குமாரஸ்வாமி | 1 | 8 |
| மாயா விநோதினி | ,, | ஸ்ரீமதி தஞ்சம் | 1 | 8 |
| ரஜனி | ,, | ஸ்ரீ எஸ். குருஸ்வாமி | 0 | 12 |
| மாதங்கினி | ,, | ஸ்ரீ. டி. என். குமாரஸ்வாமி | 1 | 0 |
| குமுதினி | ,, | ஸ்ரீமதி ரங்கநாயகி | 1 | 8 |

(ஆர்டர்களுடன் முன் பணம் அனுப்பவேண்டும்)

சுவேதாரண்ய ஆசிரமம் 7, வடக்குமாட வீதி, மைலாப்பூர் சென்னை.

சரத் சந்த்ர சாட்டர்ஜி எழுதிய இவ்வுயர்ந்த நவீனம் நம் தமிழ் பாஷையில் மொழி பெயர்க்கப்படத் தகுந்தது. மூலத்திலிருக்கும் ருசி கொஞ்சமும் மாறாது அழகாக மொழி பெயர்ப்பாளர் கையாண்டிருக்கிறார். தமிழ் எழுத்தாளர்கள் மேன்மேலும் இதுபோன்ற வங்காளி, ஹிந்தி, முதலிய பாஷையிலெழுதப்பட்டவைகளை நம் தாய் பாஷையில் மொழி பெயர்க்கப்படுவதுபோல், அந்தந்த பாஷை எழுத்தாளர்களும் நம் தமிழ் இலக்கிய விருத்திக்கு பாடுபடுவார்களென்று நம்புகிறோம்.

பேஸிஸ்ட் ஜடாமுனி: ஆசிரியர் சொ. விருத்தாசலம். பி. ஏ. நவயுக பிரசுராலயத்தின் வெளியீடு. விலை ரூ. 1—8—0.

“கருப்புச் சட்டைத் தொண்டர்களின் புரட்சியை பாதுகாத்து அதை வளர்க்கவே நான் இங்கு வந்திருக்கிறேன். நான் விரும்பி யிருந்தால் என் எதிரில் இருப்பவை எல்லாவற்றையும் நிர்த்தூளியாக்கி இருக்க முடியும்” என்று சென்ற 1922-ம் வருஷம் நவம்பர்மீ 16-ந்தேதி பிரதம மந்திரி என்ற ஹோதாவில் செனட், கீழ்ச் சபை, இரண்டையும் ஒன்றாகக் கூட்டிவைத்து “தனது முதற் பிரசங்கம் என்ற வெடிகுண்டை எறிந்த சர்வாதிகாரி” முஸோலினியின் சரித்திரத்தை மிகவும் சாமர்த்தியத்துடன் பாமரர்களுக்கும் புரியும் எளிய நடையில் ஆசிரியர் எழுதி யிருக்கிறார். படிப்பவர் மனதைக் கவரும் பல அரிய விஷயங்களையும் வெளிப்படுத்தி சரித்திரத்திற்கு ரஸத்தைக் கொடுத்திருக்கிறார் ஆசிரியர். ஒவ்வொருவரும் படிக்கத் தகுந்த புத்தகம் இது.

மூவிடோன் நியூஸ்: மூவிடோன் நியூஸ் ஆபீஸ் வரத முத்தையப்பன் தெரு, ஜி. டி. மதராஸ்.

மூவிடோன் நியூஸ் என்ற ஆங்கில மாதப் பத்திரிகையின் இதழ் ஒன்று எமது பார்வைக்கு வரப்பெற்றோம். யுத்த காரணமாக சிலகாலம்நிறுத்தப்பட்டிருந்த, இப் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை ஸ்ரீசிவபுண்யம் ஏற்று, இன்னும் விமரிசையாய் நடத்த உத்தேசித்துள்ளதாய்த் தெரியவருகிறது. பத்திரிகையை கையில் எடுத்தவுடனேயே, யாவருக்கும் படிக்க வேண்டுமென்கிற, ஓர் ஆர்வம் உண்டாகும் வண்ணம் முகப்பின் தோற்றமளிக்கிறது. பத்திரிகையின் உள் கெட்அப் (Get up) மிகவும் நேர்த்தியாயிருக்கிறது. சினிமா ரஸிகர்களுக்கேற்ற வண்ணம் பல, நடிக, நடிகைகளின் படங்கள் அங்கங்கே, மிளிர்கின்றன.




ஒரூரில் ஒரு பிரபு இருந்தார். அவருக்கு ஏராளமான பொருளிருந்தது. ஓர் அருமைப் புதல்வனுமிருந்தான். அவன் தக்க வயதையடைந்த பின்பும், சொத்து விஷயமாய் ஒரு விதப் பொறுப்புமில்லாமலிருந்தான். அதுவும் தவிர, தானாகவும் பொருள் தேடுவதில் கவலை கொள்ளாமலிருந்தான்.


அது கண்ட அவன் தந்தை அவனுக்குப் பொருளின் அருமை தெரியும்படி செய்ய எண்ணி, அவனுக்கு ஆடையாபரணங்களெல்லாம் வாங்கிக்கொடுத்து, காலுக்குப் பாதரக்ஷை மாத்திரம் வாங்கிக் கொடுக்காமலிருந்தார். அதனால் அவன் தன் தாயாரிடம் பாதரக்ஷைக்கு வேண்டிய பணத்தை வாங்கிக்கொண்டு, தானே கடைக்குப்போய் பாதரக்ஷை வாங்கிப் போட்டுக்கொண்டான்.

அவன் தினந்தோறும் வெளியே போய் வந்தவுடன், பாதரக்ஷையைக் கழற்றித் துடைத்துப் பீரோவில் வைத்துப் பூட்டுவான். பிறகு மறுபடியும் வெளியில் போகும் போது எடுத்துப் போட்டுக் கொள்வான்.

இதைப் பார்த்துக் கொண்டே வந்த அவன் தந்தை ஒரு நாள், மகனைத் தம் நண்பர்கள் முன்னிலையில் அழைத்து வைத்துக் கொண்டு —"அப்பா, குழந்தாய்! பாதரக்ஷை நீயாக வாங்கிய பொருளாதலின் அதன் மீது இவ்வளவு சிரத்தையெடுத்துக் கொண்டு, அதைத் துடைத்துப் பீரோவில் வைத்துப் பூட்டிப் பாதுகாத்து வருகிறாய்! நான் தேடிய பொருள் நீ சிரமப்பட்டுத் தேடாததாகையால், உன் பாதரக்ஷையை விடப் பதின்மடங்கு விலையுயர்ந்த என் பொருள்களை, வீணாக்குகிறாய்! நீ தேடிய பொருளினிடத்தில் உனக்கு எப்படிப்பட்ட அன்பிருக்கிறதென்பதை இப்போது நீ உணர்கிறாய்! அது போல் நான் கஷ்டப்பட்டுத் தேடிய பொருளினிடத்தில் எனக்கு எப்படிப்பட்ட அன்பு இருக்கும் என்பதை நீ உணரவேண்டும்! அப்படிப்பட்ட என் பொருளை நீ வீணாக்கலாமா? வீணாக்கினால் என் மனம் வருந்தாதா? தந்தையின் மனம் மகிழும் வழியில் நடப்பதல்லவா மைந்தனின் கடமை?

நான் தேடிய பொருளை நீ வீணாக்காமல் அதனை மேன்மேலும் விருத்தியாக்கப் பாடுபடுவாயானால் என்மனம் எவ்வளவு ஸந்தோஷமடையும்? இந்த வித்தியாசத்தை நீ உணரவேண்டுமென்றுதான், நான் உனக்கு நீ விரும்பும் ஆடையாபரணங்களை வாங்கிக் கொடுத்து, பாதரக்ஷை மாத்திரம் வாங்கிக் கொடுக்காமலிருந்தேன்!" என்றார்.

மைந்தன் இதைக் கேட்டதும் பொருள்தேடுவதில் உள்ள கஷ்டத்தையும், தேடிய பொருளில் ஒருவனுக்கிருக்கும் அன்பு இவ்வளவு என்பதையும், அதனைப் போற்றுவதே கடமையென்பதையும் உணர்ந்தான். அன்று முதல் புத்திசாலியாக நடந்துவந்தான்.



“மன்ளி பெள்ளி”யில் ஒரு காட்சி